# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

**மானியக் கோரிக்கை எண்.22**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

# 2014–2015



## செல்வி ஜெ ஜெயலலிதா

**முதலமைச்சர்**





©

**தமிழ்நாடு அரசு**

**2014**

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I | முன்னுரை | 1–3 |
| II | நிருவாக அமைப்பு | 4–5 |
| III | சட்டம் – ஒழுங்கு | 6–14 |
| IV | குற்ற நிலவரம் | 14–21 |
| V | சாலை விபத்துகள் | 22–26 |
| VI | காவல்துறை நவீனமயமாக்கல் | 27–31 |
| VII | நலத்திட்டங்கள் | 31–49 |
| VIII | பெண் காவலர்கள் | 49–51 |
| IX | காவல்துறையில் சிறப்புப் பிரிவுகள் | 52–133 |
| X | வாகன வசதி | 133–134 |
| XI | காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள் | 134–138 |
| XII | காவல்துறையின் முக்கிய நிகழ்ச்சிகள் | 139–146 |
| XIII | தடய அறிவியல் துறை | 146–149 |
| XIV | முடிவுரை | 149–150 |
| | பிற்சேர்க்கைகள்– 1–8 | 151–163 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல்துறை

# மானியக் கோரிக்கை எண்.22

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

## I. முன்னுரை

ஒரு மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்குப் பொது ஒழுங்கு, சமுதாயத்தில் அமைதி மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு ஆகியவை இன்றியமையாததாகும். எனவே, தமிழக காவல்துறை, சட்ட அமலாக்கம், குற்ற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துதல், பொது ஒழுங்கு மற்றும் அமைதியைப் பராமரித்தல் போன்ற இன்றியமையாத பணிகளை மேற்கொள்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. இவ்வாறான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குத் திறமையான காவல் பணி அத்தியாவசியமாகிறது.

சமுதாயத்தில் இயங்கி வரும் பல்வேறு அமைப்புகளிலும் காவல்துறையின் பணி நிறைந்து காணப்படுகிறது. எனவே, காவல் பணியாளர் அரசின் வெளிப்படையான பிரதிநிதியாக கருதப்படுகிறார். மிகவும் தேவையான, ஆபத்தான, இக்கட்டான, கஷ்டமான சூழ்நிலையில் என்ன செய்வது, யாரை அணுகுவது என்று தெரியாமல் ஒரு குடிமகன் இருக்கும்போது தகுந்த அணுகக் கூடிய இடமாகவும், நபராகவும் கருதப்படுவது காவல் நிலையமும், ஆண்/பெண் காவலரும் தான். எனவே, சமூகத்தில், எளிதாக அணுகக்கூடிய, உணர்வுகளை புரிந்து கொள்ளக்கூடிய, சக்தி வாய்ந்த அமைப்பாக காவல்துறையினர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

சட்டத்தை நடுநிலையாகச் செயல்படுத்துதல், தனி மனித பாதுகாப்பு, சுதந்திரம், சொத்து, மனித உரிமைகள் மற்றும் பொதுமக்களின் கண்ணியத்தைப் பாதுகாத்தல், பொது ஒழுங்கை பாதுகாத்து மேம்படுத்துதல், உள் நாட்டு பாதுகாப்பு, பயங்கரவாத

நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுத்தல், உள்நாட்டு பாதுகாப்பை பாதிக்கும் வகையிலான மத நல்லிணக்கமின்மை மற்றும் இதர சூழ்நிலைகள் உருவாவதைத் தடுத்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் குற்றங்கள் புரிவதற்கான வாய்ப்புகளை குறைத்தல் ஆகியவை காவல்துறையினரின் முக்கியமான கடமைகளாகும்.

தமிழக காவல்துறை நன்கு பயிற்சி பெற்ற, நன்கு ஆயத்தமான படையாகவும், மக்களிடம் மனித நேயத்தோடும், நட்புணர்வோடும் தங்களுடைய கடமையை செய்யக்கூடியதாகவும், காவல் படை என்ற அமைப்பிலிருந்து காவல் சேவை என்ற உயரிய நோக்கம் கொண்ட ஓர் அமைப்பாக இருக்கக்கூடியதாகவும், சமூகத்தின் தேவைகளை உணர்ந்து எனது அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு பொருத்தமாகவும் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய குறிக்கோள்.

## II. நிருவாக அமைப்பு

1.6.2014–ன்படி காவல்துறையில், ஏற்பளிக்கப் பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 1,20,895 ஆகும். தமிழ்நாடு அரசின் உள்துறையின் கீழ் காவல்துறை இயங்கி வருகிறது. காவல்துறை தலைமை இயக்குநர், சட்டம்–ஒழுங்கு, மாநில காவல்துறையின் தலைவராவார். தமிழக காவல் துறையானது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல்துறை தலைவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்கள் காவல்துறை துணைத் தலைவரின் தலைமையில் 11 சரகங்களாகவும், காவல்துறை கூடுதல் இயக்குநர் / காவல்துறைத் தலைவர் / காவல்துறை துணைத் தலைவர் கட்டுப்பாட்டில் ஏழு ஆணையரகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டு இரயில்வே காவல் மாவட்டங்கள் உட்பட, 33 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. காவல்

துணைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் 244 உட்கோட்டங்கள் உள்ளன. 199 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 249 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் மற்றும் 36 புறக்காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1,772 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

காவல்துறையில் உள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகள் குறிப்பிட்ட முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவை, நுண்ணறிவுப் பிரிவு, குற்றத் தடுப்புப் பிரிவு, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு, சிறப்பு செயலாக்கப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை, தொழில்நுட்பப் பிரிவு, சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு, ஆயுதப் படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், அமலாக்கப் பிரிவு, ஊர்க்காவல் படை மற்றும் மாநில குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவையாகும்.

## III. <u>சட்டம் – ஒழுங்கு</u>

தொழில், வணிகம் மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு, அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழல் அவசியமாகிறது. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு, பொது அமைதி பராமரிப்பு என்பது முக்கிய காரணியாகும். மாநிலத்தில், பெரும்பாலும் அமைதியான சூழலே நிலவி வருகிறது. அவ்வப்போது, பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி, அரசியல் கட்சிகள், சாதி, வகுப்புவாத மற்றும் இதர இயக்கங்கள் போராட்டங்கள் நடத்தியபோது, வன்முறை அல்லது பொது அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் அப்போராட்டங்கள் திறமையாகக் கையாளப்பட்டன. காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கூடத்தினர் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, 2012–ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 21,232 போராட்டங்கள் நடைபெற்றன. இது இந்திய நாட்டின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில், 25 விழுக்காட்டிற்கும் அதிகமாகும். அதே வேளையில்,

போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த, காவல் துறையினர் பலப்பிரயோகம் செய்த நிகழ்வுகள், அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது, வெறும் 0.5 சதவிகிதமாகும். ஒவ்வொரு நாளும் சராசரியாக 60 போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலும், பொது இடங்களில் கூடுதல் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கான ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு உரிமைகளை நசுக்க முற்படாமல், மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு எவ்வித குந்தகமுமின்றி தமிழக காவல்துறையினர் செயல்பட்டு, அமைதியைப் பேணிக் காத்துள்ளனர்.

ஆண்டுதோறும், பல்வேறு சாதிகளால் அடையாளப்படுத்தப்படும் புகழ் பெற்ற மற்றும் தற்கால தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாள் அனுசரிக்கப்படும் நிகழ்வுகள் மற்றும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் சாதி மற்றும் வகுப்பு குழுக்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள் பெரும் கூட்டத்தை கவரக்கூடியதாக உள்ளன. இந்த நிகழ்வுகள்

நடைபெறும் குறிப்பிட்ட இடங்களில் கூடுவதற்காக நீண்ட தூரம் மக்கள் பயணம் மேற்கொள்கிறார்கள்.

கடந்த ஆண்டுகளில், இதுபோன்ற நிகழ்வுகளின்போது வன்முறை, சொத்துக்களுக்குச் சேதம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்புகள் ஏற்பட்டன. 2013–ஆம் ஆண்டில், சில கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டு, முக்கியமாக பிற மாவட்டங்களிலிருந்து வாடகை வாகனங்களில் வருவது தடை செய்யப்பட்டது. இத்தகைய கட்டுப்பாடுகள், அசம்பாவித சம்பவங்கள் ஏதுமின்றி அனைத்து நிகழ்ச்சிகளும் அமைதியாக நடைபெற உதவிபுரிந்தன.

கூடங்குளம் அணுமின் நிலைய திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, இடிந்தகரையில் போராட்டம் நடைபெற்றபோது, அணுமின் நிலைய செயல்பாட்டிற்கு எவ்வித பாதிப்புமின்றி, நிலைமை நன்கு கையாளப்பட்டது.

## அ) <u>காவல் சீர்திருத்தச் சட்டம், 2013</u>

தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், **2013**—ஐ எனது அரசு இயற்றியது. மாநில பாதுகாப்பு ஆணையம், காவல் நிர்வாக வாரியம், மாநில காவல் புகார்கள் ஆணையம், மாவட்ட புகார்கள் ஆணையம் மற்றும் காவல் புகார்கள் பிரிவு, காவல் நிலைய அளவில் சட்டம்—ஒழுங்கு மற்றும் புலனாய்வு பிரிவுப் பணிகளைப் பிரித்தல், குறிப்பிட்ட பதவிகளுக்குக் கால நிர்ணயம் செய்தல் ஆகிய புது அம்சங்கள் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டமானது பிரகாஷ்சிங் மற்றும் பலர் (இந்திய அரசு மற்றும் பலருக்கு எதிராக) தாக்கல் செய்த நீதிப்பேராணை (உரிமையியல்) மனு எண்.**310/1996**—ல் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதலின்படி, இயற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், **2013** தமிழக அரசின் அரசிதழில் **8.11.2013** அன்று வெளியிடப்பட்டது.

## ஆ) காவல் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்

2013–ஆம் ஆண்டில், காவல் பாதுகாப்பின்போது 15 மரண சம்பவங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. தற்போதுள்ள சட்டப்படி, நடுநிலைமையை பராமரிக்கும் வகையில் நீதிமன்ற நடுவர்கள்தான் இவ்வழக்குகளை விசாரிக்க வேண்டும். இதற்கு முன்பு, வருவாய் கோட்டாட்சியர்கள் இதுபோன்ற வழக்குகளை விசாரித்து அறிக்கைகளை அளித்தனர். அவர்கள் அளிக்கும் அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில், மரணத்திற்கான உத்தேச காரணங்கள் குறித்தும், அதன்படி தேவைப்பட்டால் தவறு இழைத்த காவல்துறையினர் மீது குற்ற மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுப்பது குறித்தும் அரசால் முடிவு செய்யப்பட்டு வந்தது. 2005–ஆம் ஆண்டைய குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர், இந்த வழக்குகள் மீதான

விசாரணை நடத்தும் பொறுப்பு நீதிமன்ற நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட 15 வழக்குகளிலும், நீதிமன்ற நடுவர்கள் விசாரணை நடத்திய பின்னர், அவர்களது அறிக்கையின் பேரில், அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், ஆரம்ப கட்ட விசாரணையின் அடிப்படையில் 10 காவல் பணியாளர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். காவல் நிலைய மரணங்கள் மற்றும் சித்ரவதை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக காவலர்களுக்கு கூருணர்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களைப் பாதுகாப்பதுதான் காவல்துறையினரின் கடமை என்ற கொள்கையில் எனது அரசு திடமாக உள்ளது.

மேலும், ஆரம்பகட்ட விசாரணையில், காவல் பணியாளர் தவறிழைத்திருப்பதாக தெரிய வந்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்

இழப்பீடாக அரசால் வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி, இவ்வழக்குகளில் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் அல்லது தேசிய மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் அதிகளவிலான இழப்பீட்டுத்தொகையும் அரசால் வழங்கப்படுகிறது.

பிரேதப் பரிசோதனை செய்வதற்கு, மருத்துவர் குழுவைப் பயன்படுத்துதல், பிரேதப் பரிசோதனையைக் காணொலிக் காட்சி மூலம் பதிவு செய்தல் போன்றவை தொடர்பாக எண்ணற்ற வழிகாட்டு நெறிமுறைகளைத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வகுத்துள்ளது. இத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப் படுவதோடு, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவின்பேரில், தொடர்புடைய அறிக்கைகள் அவ்வாணையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

**இ) <u>காவல் துப்பாக்கிச் சூடு</u>**

கடந்த சில ஆண்டுகளாக காவல் துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்து

வருவதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

| வரிசை எண் | வருடம் | துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2006 | 17 |
| 2 | 2007 | 13 |
| 3 | 2008 | 17 |
| 4 | 2009 | 8 |
| 5 | 2010 | 12 |
| 6 | 2011 | 6 |
| 7 | 2012 | 7 |
| 8 | 2013 | 8 |

2006 முதல் 2010–ஆம் ஆண்டு வரையிலான காலங்களில், ஆண்டொன்றுக்குச் சராசரியாக 13 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. 2011–ஆம் ஆண்டு முதல் அவற்றின் சராசரி ஏழாக

குறைந்துள்ளன. **2013–**ஆம் ஆண்டில் நிகழ்ந்த எட்டு துப்பாக்கிச் சூடு சம்பவங்களில், நான்கு மட்டுமே பொது அமைதியைக் காப்பதற்காக கூட்டத்தினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் ஆகும். இதில், யாரும் மரணமடையவோ, காயமடையவோ இல்லை. இதர நான்கு சம்பவங்கள் குற்றவாளிகள் மீது நடத்தப்பட்டவையாகும். உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க வேறு வழியின்றி, நிலைமை கட்டுக்கடங்காமல் போகும்பட்சத்தில் மட்டுமே, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட வேண்டும் என்று தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## IV. <u>குற்ற நிலவரம்</u>

### அ) <u>சொத்து தொடர்பான குற்றங்கள்</u>

வழக்குகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற வலியுறுத்தலின்பேரில், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை சற்று உயர்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட ஒருவர், தான் இழந்த

சொத்து தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். வழக்குக் கண்டுபிடிப்பு புள்ளி விவரங்கள் பாராட்டுக்குரியதாக அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு, வழக்குகளைக் குறைந்த எண்ணிக்கைகளில் பதிவு செய்யும் போக்கை எனது அரசு ஒருபோதும் ஊக்குவிப்பதில்லை.

பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில், குற்ற விகிதம் (ஒரு லட்சம் மக்கள் தொகைக்கேற்ப வழக்குகளின் எண்ணிக்கை) குறைவாகவே உள்ளது. இந்தியாவில் குற்றங்கள் தொடர்பாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள 2012–ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டு புள்ளிவிவரத்தின்படி, தமிழ்நாட்டில் சொத்து தொடர்பான வழக்குகளின் குற்ற விகிதம் 27.16 ஆகும். அதேசமயம், அகில இந்திய அளவில், குற்ற விகிதம் 38.33 ஆக உள்ளது.

முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது, 137 ஆக இருந்த ஆதாயக் கொலை வழக்குகளின் எண்ணிக்கை, 2013–ஆம் ஆண்டில் 121 ஆகக் குறைந்துள்ளது.

2012–ஆம் ஆண்டில் 13,275 ஆக இருந்த கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, 2013–ஆம் ஆண்டில் 13,880 ஆக உயர்ந்துள்ளது. இதனால், 2012–ஆம் ஆண்டில் ரூ.80.19 கோடியாக இருந்த மீட்கப்பட்ட சொத்துகளின் மதிப்பு, 2013–ஆம் ஆண்டில் ரூ.146.59 கோடியாக அதிகரித்துள்ளது.

| **சொத்து** | **2012 ரூபாய் (கோடியில்)** | **2013 ரூபாய் (கோடியில்)** |
|---|---|---|
| திருடப்பட்ட சொத்து | 131.85 | 190.29 |
| மீட்கப்பட்ட சொத்து | 80.19 | 146.59 |

## ஆ) இந்திய தண்டனைச் சட்ட வழக்குகள்

2013–ஆம் ஆண்டில், இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 2,03,579 ஆகும். 2012 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில், பல்வேறு தலைப்புகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் பிற்சேர்க்கை–1ல் தரப்பட்டுள்ளன.

## இ) பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

2013–ஆம் ஆண்டில், பாலியல் வன்முறை வழக்குகளின் எண்ணிக்கை 923 ஆகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அதன் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. எனினும், பெரும்பாலான புகார்கள், திருமண வயதை அடையாத பெண், தன் விருப்பத்தின் பேரில் காதலனுடன் சென்றுவிடுபவையாகும். மேலும், ஒரு பெண் தன்னுடன் தொடர்பு வைத்திருந்த தன் காதலன் தன்னைத் திருமணம் செய்துகொள்ள மறுக்கும்பட்சத்தில், அவர் தன்னைப் பாலியல்

பலாத்காரம் செய்ததாகப் புகார் அளிக்கும் வழக்குகளும் உள்ளன. இருப்பினும், இவ்வாறான அனைத்து வழக்குகளிலும் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை துணைத் தலைவர் நிலையில் உள்ள உயர் அதிகாரிகளின் மேற்பார்வையுடன் நேர்மையான முறையில் புலன் விசாரணை நடத்தப்படுகிறது. பொருத்தமான வழக்குகளில் குற்றவாளிகள் குண்டர் சட்டத்தின்கீழ், சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

எனது அரசு, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முழு முயற்சியுடன் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சிறுசேரியில், தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றிய பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தையொட்டி, தொழில்நுட்ப துறை பிரதிநிதிகளோடும், இதர பெரிய நிறுவனங்களோடும் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, பெண்களின் பாதுகாப்பை உறுதி

செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து திட்டமிடப்பட்டது.

### ஈ) <u>கொலைகள்</u>

முந்தைய ஆண்டைப் போலவே, **2013**–ஆம் ஆண்டிலும், கொலைகளின் எண்ணிக்கை எவ்வித அதிகரிப்புமின்றி **1,806** ஆகவே இருந்தது. பிற்சேர்க்கை – **2**ல் தரப்பட்டுள்ள பத்தாண்டு களுக்கான பதிவு செய்யப்பட்ட கொலை சம்பவங்களின் எண்ணிக்கை விவரங்களின்படி, **2004–2006**–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வந்த போதிலும், **2006** முதல் **2010**–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் குற்றங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வந்துள்ளது. இக்காலகட்டத்தில், சராசரியாக குற்றங்களின் எண்ணிக்கை, ஆண்டொன்றுக்கு **8.65** விழுக்காடாக அதிகரித்துள்ளது. பின்னர், அதன் உயர்வு சதவிகிதம் தொடர்ந்து குறைந்துள்ளது.

பெரும்பாலான கொலை வழக்குகள், கொடூரத் தாக்குதல் மூலம் நிகழ்ந்த சம்பவங்களே. பிற்சேர்க்கை–3ல் கொடுக்கப்பட்டுள்ள, கொலை நிகழ்வுகளுக்கான காரணங்களில், குடும்பத் தகராறுகள், வாய்ச் சண்டைகள், முன் விரோதங்கள், காதல் விவகாரங்கள், பணப் பரிமாற்றங்கள், நிலத் தகராறுகள் ஆகியவையே முக்கிய காரணங்களாகும்.

**உ) <u>நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவு</u>**

மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் 39 நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவுகளும், மாநில காவல் தலைமையகத்தில் ஒரு பிரிவும் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

2011–ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2014–ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான நில அபகரிப்பு வழக்குகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :–

| பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட சொத்து (நிலம் / வீட்டு மனைகள்) ஏக்கரில் / சதுர அடியில் | மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| **2,482** | **2,661** | **4,587 ஏக்கர் (நிலம்) / 23,81,610 சதுர அடி** | **1,819** |

சொத்துக்கள் மீட்கப்பட்டு, அதன் மூலம் **2,481** உண்மையான உரிமையாளர்கள் பயனடைந்துள்ளனர். **558** வழக்குகளில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு, மூன்று வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென **25** சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றில், **21** இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

## V. சாலை விபத்துகள்

### அ) சாலை விபத்து புள்ளி விவரங்கள்

சாலை விபத்து குறித்த புள்ளி விவரங்கள் பின்வருமாறு :

| வருடம் | விபத்துக்களின் எண்ணிக்கை | உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2009 | 60,794 | 13,746 |
| 2010 | 64,996 | 15,409 |
| 2011 | 65,873 | 15,422 |
| 2012 | 67,757 | 16,175 |
| 2013 | 66,238 | 15,563 |

தமிழ்நாட்டில், வாகனங்களின் எண்ணிக்கையானது அதிவேகமாக வளர்ந்து கொண்டே வருகிறது. 1.3.2014–ன்படி, 1.87 கோடியாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கையானது, 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வாகனங்களின் எண்ணிக்கையை விட, இரண்டரை மடங்கு

அதிகமாகும். ஆண்டொன்றுக்கு, சுமார் 10 விழுக்காடு என்ற வீதத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது. தென் மாநிலங்களிலேயே, தமிழ்நாட்டில்தான் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இத்தகைய வாகன எண்ணிக்கையின் பெருக்கம் மற்றும் அதிவிரைவு நகரமயமாதல் காரணமாக, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் சாலை விபத்துக்களும், உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றன. சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், வேலூர், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதைப்பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை–4ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும், கடந்த 5 ஆண்டுகளில், முதன் முறையாக 2013–ஆம் ஆண்டில், விபத்துகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. மாவட்டங்களில் அறிமுகப்

படுத்தப்பட்ட சம்பவ இடத்திலேயே அபராதம் விதிக்கும் முறையானது, போக்குவரத்து சட்டங்களை அமல்படுத்தவும், தவறிழைக்கும் ஓட்டுநர்களை நெறிப்படுத்தவும் உதவியாக அமைந்தது.

## ஆ) <u>சாலை விபத்து தரவு மேலாண்மை முறை (RADMS)</u>

உலக வங்கியின் உதவியுடன் கூடிய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள, இந்தச் சாலை விபத்து தரவு மேலாண்மை முறை (RADMS), சாலை விபத்துக்கள் குறித்த தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதெற்கென பயன்பட்டு வருகிறது. சாலை விபத்து குறித்த தங்கள் துறை சார்ந்த தகவல்களைப் பதிவு செய்ய காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## இ) நெடுஞ்சாலை ரோந்து வாகன கண்காணிப்பு முறை

தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில், தற்போது 260 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், 122 வாகனங்களில், புவிசார் இருப்பிட முறைமை (GPS) கருவி பொருத்தப்பட்டு, காவல் தலைமையிடத்தில் உள்ள மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு அலுவலகத்தில் இயங்கி வரும் நெடுஞ்சாலை ரோந்து கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே இவ்வாகனங்களின் இருப்பிடம் கண்காணிக்கப்படுகிறது. இதர வாகனங்களிலும் இவ்வகைக் கருவிகள் பொருத்தப்படும். நெடுஞ் சாலைகளில் விபத்துக்கள் நிகழும்போது, இத்தகைய ரோந்து வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பணியாற்றுகின்றன. உயிர் காக்கும் ‘‘பொன்னான நேரம்’’ (Golden Hour) திறம்பட கையாளப்பட்டு, நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள்

உதவியுடன் **28,191** சாலை விபத்துகளின்போது மீட்பு பணிகளில் ஈடுபட்டு, காயமடைந்த **22,440** நபர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். **2013**–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் **2014**–ஆம் ஆண்டு மே மாதம் வரை, சரியான நேரத்தில் பணியாற்றியதன் காரணமாக **18,384** உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதென மதிப்பிடப்படுகிறது. மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவானது, சம்பந்தப்பட்ட அமைப்பினருடன் ஒருங்கிணைந்து சாலை பாதுகாப்பு கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் போன்றவற்றை நடத்துவதோடு, ஊடகங்கள், கம்பிவடத் தொலைக் காட்சி, அர்ப்பணிப்புடன் கூடிய அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன், சாலை விதிகள் குறித்து சாலையை பயன்படுத்து வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

## VI. காவல்துறை நவீனமயமாக்கல்

மாநிலங்களில் உள்ள காவல் படைகளை நவீனப்படுத்தும்பொருட்டு, மத்திய அரசு, காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், மாநில அரசுகளுக்கு திட்டமிடா மற்றும் திட்டமிட்ட செலவினங்களின் கீழ் நிதி அளித்து வருகிறது. இத்திட்டத்தை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு, (நிதியாண்டு 2012–13–லிருந்து 2016–17 வரை) மத்திய அரசு நீட்டித்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் வரவு–செலவு நிதியிலிருந்து, வாகனங்கள், ஆயுதங்கள், கருவிகள், பயிற்சி கருவிகள் மற்றும் தடய அறிவியல் கருவிகள் ஆகியன வாங்குவதற்காக திட்டமிடா செலவினங்களின் கீழும், கட்டடங்கள் கட்டுதல், பயிற்சி அளிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காக திட்டமிட்ட செலவினங்களின் கீழும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 12–வது திட்ட காலத்திற்குட்பட்ட, ஐந்தாண்டு

காலத்திற்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடாக திட்டமிடா செலவினங்களின் கீழ் ரூபாய் 8,195.53 கோடியும், திட்டமிட்ட செலவினங்களின் கீழ் ரூபாய் 3,750.87 கோடியும் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, திட்டமிடா வரவுசெலவு திட்டத்தின் கீழ், ஆறு மாநிலங்களுக்கான மகா நகர காவல் திட்டத்தின் (Mega City Policing) கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.432.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சென்னை மாநகரமும் அடங்கும். மத்திய நிதி அமைச்சகம் மற்றும் திட்டக்குழுவினால் நடைமுறைப்படி அனுமதிக்கப்படும் வரவு செலவு திட்ட ஆதாரங்களுக்கேற்ப, வருடாந்திர நிதி ஒதுக்கீடு அமையுமென மத்திய உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இனங்கள் மற்றும் அதற்கென இந்திய அரசின் வழிகாட்டு

நெறிமுறைகள்படியான அரசின் நிதி ஒதுக்கீட்டு விகிதம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள்/வீட்டுவசதி | : | 50% |
| வாகனங்கள் | : | 25% |
| ஊர்க்காவல் படை மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு பிரிவு | : | 5% |
| நுண்ணறிவு | : | 5% |
| ஆயுதங்கள், தகவல் தொடர்பு, பயிற்சி, சாதனங்கள், கணினிகள், தடய அறிவியல் துறை மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் போன்ற இதர வகைகள் | : | 15% |

## நிதி விகிதாச்சாரம்

சில மாநிலங்கள் 'முதல்'வகை மாநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டு, அவை மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியை **90:10** என்ற விகிதத்தில் பெற தகுதியானவை ஆகின்றன. ஜம்மு காஷ்மீர், சிக்கிம் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் 'முதல்'வகை

மாநிலங்களாகும். தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்கள் ‘இரண்டாம்’வகை மாநிலங்களென வகைப்படுத்தப்பட்டு, அவற்றிற்கு மொத்த திட்ட தொகையில் மத்திய அரசு மானியமாக 60 விழுக்காடு மட்டுமே அளிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 40 சதவிகிதத்தை மாநில அரசுகளே ஒதுக்கீடு செய்திட வேண்டும். 2011–2012 ஆண்டு வரையில், மத்திய அரசின் பங்கானது 75 சதவிகிதமாக இருந்தது. ஆனால், தற்போது இது 60 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

நிதியாண்டு 2000–2001 முதல் 2013–2014 வரையிலான காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கென மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை–5 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்திய அரசால் காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது ரூ.1000 கோடியிலிருந்து ரூ.300

கோடியாக குறைந்துள்ளது. இதனால் மாநில அரசுக்கான நிதி ஒதுக்கீடும் மற்ற வருடங்களோடு ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது.

## VII. நலத்திட்டங்கள்

### அ) விருப்புரிமை நிதிக்கான ஒப்பளிப்பு மற்றும் இம்மானியத்தின் கீழ் வாங்கப்பட்டவை

அரசாணை (நிலை) எண்.838, உள் (காவல் 1) துறை, நாள் 30.10.2012–ன்படி, காவல்துறைக்கு தேவையான சாதனங்கள் வாங்குவதற்கு உட்பட இதர தேவைகளுக்கென காவல்துறை இயக்குநரின் விருப்புரிமை நிதியமாக ரூபாய் ஐந்து கோடி அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2013 – 2014 நிதி ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட ரூபாய் ஐந்து கோடி உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு பிரிவுகளுக்காக மொத்தம் 7,638 பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

## ஆ) <u>தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்</u>

தமிழக காவல்துறையில், அமைச்சுப் பணியாளர் உட்பட, அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் நன்மைக்காக, தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்டமானது, காவல்துறை இயக்குநரை தலைவராகக் கொண்ட மத்திய குழு ஒன்றால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், மூன்று மூத்த அதிகாரிகள், காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான நிலையில் உள்ள 10 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள், ஒரு கண்காணிப்பாளர் மற்றும் ஒரு தொழில் நுட்ப உதவி ஆய்வாளர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்டத்தின் நகர/மாவட்ட குழுக்களில், காவல் கண்காணிப்பாளர் மற்றும் பல்வேறு பதவி நிலைகளில்

உள்ள ஐந்து பணியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் சந்தாவாக பெறப்படும் ரூ.40 முதல் ரூ.150 வரையிலான தொகையும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளால் அரையாண்டுக்கு ஒரு முறை நன்கொடையாக அளிக்கப்படும் ரூ.700 முதல் ரூ.1500 வரையிலான தொகையும் இத் திட்டத்திற்கான முக்கிய வருவாய் ஆதாரங்களாக உள்ளன.

<u>தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவிகள்</u>

(அ) இறப்பு நேரும் பட்சத்தில், மாவட்ட குழு உடனடி குடும்ப நிவாரண நிதியை கீழ்க்கண்டவாறு வழங்குகிறது:–

சந்தாதாரர் இறக்க நேரிட்டால் ரூ.15,000/–

சந்தாதாரரின் குடும்ப உறுப்பினர்கள் இறக்க நேரிட்டால் ரூ.5,000/–

(ஆ) காவல்துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் உயர்கல்வி பயில நூற்றாண்டு கல்வி உதவித் தொகையாக ரூ.3,500/–லிருந்து ரூ.10,000/– வரை வழங்கப்படுகிறது. (அவர்கள் பயிலும் கல்வி பாடத்திற்கேற்ப)

(இ) சந்தாதாரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ.5,000/– (பணிக்காலம் முழுமையிலும் மூன்று முறை மட்டும்) மாவட்ட குழுவினால் ஒப்பளிக்கப்படுகிறது.

(ஈ) தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்டத்தின் கீழ், அதன் சந்தாதாரர்களுக்கு ரூபாய் நான்கு லட்சம் வரை நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு, மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஆண்டிற்கு ரூபாய் இரண்டு கோடி வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மத்திய குழுவினால் 161 பயனாளிகளுக்கு ரூ.2,10,49,610/– நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

(உ) பெண் காவல் பணியாளர் நலன்களுக்காக, கோவைபுதூரில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4–ஆம் அணியிலும், ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 5–ஆம் அணியிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் குழந்தைக் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்காக, ஒரு முறை மட்டும் ரூ.50 ஆயிரம் மத்திய குழுவினால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆயாக்களுக்கான ஊதியம் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கும் மற்றும் சில்லறை செலவினங்கள் மேற்கொள்வதற்கும், மாவட்ட குழு நிதியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.1,52,000/– செலவிடப்படுகிறது.

## **<u>இ) அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்</u>**

ஒவ்வொரு ஆண்டும் அரசு மானியமாக அளிக்கப்பட்டு வந்த ரூபாய் ஒரு கோடி, தற்போது அரசாணை (நிலை) எண்.288, உள் (காவல்–9) துறை, நாள்.03.04.2012 மூலம், ரூபாய் 1.2 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு மானியமானது கீழ்க்கண்ட திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது:–

### **i) <u>பரிசுத் திட்டம்</u>**

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும்/ நகரத்திலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில், முதல் 10 இடங்களில் தேர்ச்சி பெறும் காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப்பரிசுகள் கீழ்க் கண்டவாறு வழங்கப்படுகின்றன:–

| வகுப்பு | முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | நான்கு முதல் பத்தாமிடம் வரை |
|---|---|---|---|---|
| 10 | ரூ.6,500 | ரூ.4,500 | ரூ.2,500 | ரூ.2,000 |
| 12 | ரூ.7,500 | ரூ.5,500 | ரூ.3,000 | ரூ.2,500 |

2013–ஆம் ஆண்டு, 704 பிள்ளைகளுக்கு மொத்தம் ரூ.22,34,000/– பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## ii) தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித்தொகை

சிறப்பாக கல்வி பயிலும் காவல் பணியாளர்களின் இளம் பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையிலும், உதவிபுரியும் நோக்கத்தோடும், அவர்கள் உயர்கல்வி பயில சிறப்பு கல்வி உதவித் தொகையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.25,000/– அல்லது கல்வி நிறுவனங்களில்

செலுத்தப்பட வேண்டிய கல்விக் கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை நான்கு வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரையில் வழங்கப்படுகிறது. விடுதிக் கட்டணத்தையும் உள்ளடக்கிய இந்தத் தொகையானது 2012–ஆம் ஆண்டு ரூ.20,000/–த்திலிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2013–ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கென முதல் தவணையாக ரூ.23.31 லட்சமும், இரண்டாவது தவணையாக ரூ.20.96 லட்சமும். மூன்றாவது தவணையாக ரூ.12.38 லட்சமும் மற்றும் நான்காவது தவணையாக ரூ.13.60 லட்சமும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

**ஈ) <u>கருணைத் தொகை வழங்குதல்</u>**

காவல் பணியாளர்கள் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு அல்லது துன்பகரமான சூழ்நிலைகளில் சிக்கி உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனம் ஏற்பட்டால் அல்லது காயமடைந்தால்,

அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் / இழப்புகளுக்கு ஈடுசெய்யும் வகையில் **ரூ.10,000/–** முதல் **ரூ.5,00,000/–** வரை அரசால் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1** | உயிரிழப்பு | **ரூ.5,00,000/–** |
| **2** | நிரந்தர ஊனம் | **ரூ.2,00,000/–** |
| **3** | பணியில் ஈடுபட முடியாதவாறு ஒரு கை / கால் / கண் / பாதம் மற்றும் விரல்கள் இழப்பு | **ரூ.1,00,000/–** |
| **4** | தீக்காயம் / குண்டடி காயம், பல்வகை எலும்பு முறிவு | **ரூ.50,000/–** |
| **5** | சிறு காயங்கள் | **ரூ.10,000/–** |

இவ்வாண்டு, **80** பயனாளிகளுக்கு மொத்தம் **ரூ.22.70** லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## உ) <u>தமிழ்நாடு காவல் பணியாளர் காப்பீட்டுத் திட்டம்</u>

அனைத்து பதவி நிலைகளிலுள்ள காவல் பணியாளர்கள், தற்போதைய தமிழ்நாடு காவல் பணியாளர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். பணியின்போது உயிரிழப்பு ஏற்படும் காவல் பணியாளரின் சட்டப்படியான வாரிசுகளும், அவர்களால் நியமிக்கப்படும் நபர்களும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இத்திட்டம், பணியில் ஈடுபடும்போது விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.

பணியின்போது உயிரிழக்கும் காவலர் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை ரூபாய் இரண்டு லட்சமும், காவல் துணை கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை ரூபாய் நான்கு லட்சமும் காப்பீட்டுத் தொகையாக

வழங்கப்படுகிறது. உடல் ஊனம் ஏற்பட்டதற்கான காப்பீட்டுத் தொகையானது, ஊனமுற்றலின் அளவிற்கேற்ப காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

**ஊ) <u>உணவு மானியத் திட்டம்</u>**

காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்கள் நியாய விலை கடைகளின் மூலம் வாங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, அவர்களுக்கு காக்கி நிறத்தில் தனி குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**எ) <u>புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைத்தல்</u>**

2011–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், 10 தமிழ்நாடு சிறப்பு காவல் படை தலைமையகங்களில் பிற்சேர்க்கை–6ல் குறிப்பிட்டவாறும், 26 ஆயுதப்படை தலைமையிடங்களில் பிற்சேர்க்கை–7ல் குறிப்

பிட்டவாறும் புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் அமைக்க இவ்வரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. **28.3.2012** அன்று இம்மையங்கள் துவக்கி வைக்கப்பட்டு, அவை காவல் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு பயனளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன. ஆயுதப் படை பிரிவு மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை பணியாளர்கள் பணிநிமித்தம் காரணமாக அவ்வப்போது தலைமையிடத்தை விட்டு நீண்டகாலம் சென்று விடுவதால், குடும்பத் தலைவர் வீட்டில் இல்லாத நேரத்தில் அவர்கள் குடும்பத்தினருக்கு இத்திட்டமானது உதவிகரமாக இருந்து வருகிறது.

## ஏ) <u>தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி</u>

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர் களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது

நிவாரண நிதியிலிருந்து ரூபாய் மூன்று லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

## ஐ) கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்

காவல் பணியாளர் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால், அவரை இழந்து வாடும் குடும்பத்திலிருந்து தகுதியுடைய மற்றும் சட்டப்படியான வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு தற்காலிக நிவாரணம் வழங்கும் பொருட்டு, **2002**–ஆம் ஆண்டு **805** தரவுப் பதிவேற்றம் செய்பவர் பணியிடங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டு, அவை செயல்பாட்டில் உள்ளன.

## ஓ) குழந்தைக் காப்பகங்கள்

சென்னை பெருநகரம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரம் ஆகிய இடங்களில் குழந்தைக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், ஆறு ஆயாக்கள், தலா மாதம் **1500** ரூபாய் என்ற தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் தற்போது சிறப்பு காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## ஓ) காவல் சிறப்பு அங்காடிகள்

காவல் பணியாளர்கள் நியாய விலையில் வீட்டு உபயோக பொருட்களை பெறும் வகையில், காவல் சிறப்பு அங்காடித் திட்டத்தினை தமிழ்நாட்டில் மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் ஆவடி ஆகிய மூன்று இடங்களில் அரசு துவக்கி உள்ளது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, ஒரு கோடி ரூபாய் நிதியுதவியை வழங்க அரசு ஒப்புதல்

அளித்துள்ளது. மத்திய காவல் அங்காடியின் தலைமை அங்காடிகளில் இருந்து இத்திட்டத்திற்கென பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகள் இல்லாத மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் வாழும் காவல் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், 45 காவல் சிறப்பு அங்காடிகளைத் துவக்க அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில், சென்னை பெருநகர காவல்துறையினருக்காக எழும்பூரில் காவல் சிறப்பு அங்காடி ஒன்றை அமைக்க, நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பை அரசு வழங்கியுள்ளது.'

## ஔ) <u>முழு உடல் மருத்துவ பரிசோதனை</u>

தனித்துவமிக்க ஒரு நலத்திட்டமாக, 40 வயதை அடைந்த காவல் பணியாளர்கள் ஆண்டிற்கு ஒருமுறை கட்டணம் ஏதுமின்றி முழு உடல் மருத்துவப்

பரிசோதனை செய்துகொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன்.

## க) மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்

2013–ஆம் ஆண்டில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், நான் 103 அறிவிப்புகளை வெளியிட்டேன். காவல்துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், காவல் பணியாளர்களின் நலன்களுக்காகவும், காவல்துறை செயல்பாட்டின் பொது மேம்பாட்டிற்காகவும் அவை அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

## ங) இதர சலுகைகள்

காவல் போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை வழங்கப்படும் சீருடைப்படி ரூ.250லிருந்து ரூ.350ஆக உயர்த்தப்

பட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத்துறை குடிமைப் பொருள் கடத்தல் தடுப்புப்பிரிவில் பணிபுரியும் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.200 என்று வழங்கப்பட்டு வந்த மிகை நேர ஊதியம் அப்பிரிவின் தலைமைக் காவலர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து காவல் ஆளிநர்களுக்கு கோடைக் காலங்களில் நாளொன்றுக்கு இருமுறை எலுமிச்சை பழச்சாறு வழங்கப்படுகிறது.

காவல்துறையினர், குற்றவாளிகளை கைது செய்யும் போதும், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை கையாளும்போதும், தங்கள் உயிருக்கு மிகப் பெரிய ஆபத்தை சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, அவர்களுக்கு இடர்படி வழங்கப்படுகிறது. 2013–ஆம் ஆண்டு காவல்துறை அதிகாரிகள் மற்றும் சிறப்பு இலக்கு படை ஆளிநர்களுக்கு வழங்கப்படும் இடர்படியை ரூ.2000த்திலிருந்து ரூ.3000ஆக எனது அரசு உயர்த்தியுள்ளது. இதைப்போன்று தற்பொழுது காவலர் முதல் ஆய்வாளர்கள் வரை வழங்கப்படும்

இடர்படி ரூ.300லிருந்து ரூ.400 ஆகவும், காவல் துணை கண்காணிப்பாளர் முதல் காவல் கூடுதல் கண்காணிப்பாளர் வரை வழங்கப்படும் இடர்படி ரூ.350லிருந்து ரூ.450 ஆகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.156, உள் (காவல்–8) துறை, நாள்.24.2.2014–ன்படி, சிறப்பு இலக்கு படை காவல் பணியாளர்களுக்கு கடினப்பணி படியாக மாதம் ரூ.900 வழங்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.155, உள்(காவல்–8) துறை, நாள். 24.2.2014–ன்படி, சமீபத்தில், மாநில குற்ற ஆவணக் காப்பகத்தில் பணிபுரியும் காவலர் முதல் ஆய்வாளர்கள் வரை மாதம் ரூ.200–ம், அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு மாதம் ரூ.225–ம் இடர்ப்படியாக வழங்கப்படுகிறது.

### ச) காவலர் மருத்துவ நல நிதி

காவலர் மருத்துவ நலநிதித் திட்டத்தின்கீழ் நிலுவையிலுள்ள கோரிக்கைகளை தீர்க்கும் வகையில் இவ்வாண்டு ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியான ரூ.50 லட்சம் முழுமையாக பயன்படுத்தப்பட்டு, அதன் மூலம் 45 காவல் ஆளிநர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## VIII. பெண் காவலர்கள்

பெண்களின் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பெண்களின் குறைகளை தீர்க்கவும், அவர்களுக்கென பிரத்யேகமாக எனது அரசு 1992-ஆம் ஆண்டில் முதலாவது அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்தது. தற்போது, மாநிலம் முழுவதும் 199 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெண்களின் குறைகளைக் களைய, ஒவ்வொரு காவல் உட்பிரிவின் கீழ் ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மொத்த அனைத்து மகளிர் காவல் நிலைய எண்ணிக்கையில், சுமார் 40 சதவிகிதம் தமிழ்நாட்டில் உள்ளது. மேலும், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் சார்பு ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்கள் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏழு மாவட்டங்களில் காவல் கண்காணிப்பாளர்களாக பெண்களே தலைமை யேற்றுள்ளனர். அதாவது ஐந்துக்கு ஒன்று என்ற வீதத்தில் மாவட்ட கண்காணிப்பாளர்களாக பெண்கள் பணியாற்றுகிறார்கள். தொழில்நுட்ப பிரிவில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரையிலான 436 பதவிகளில், 113 பெண் அதிகாரிகள் பணிபுரிகின்றனர். இவர்கள் காவல்துறையின் தனி தொலைத்தொடர்பு வலைப்பின்னல் சாதனங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோன்று, தமிழக காவல்துறையின் விரல்ரேகை பிரிவில் பணிபுரிபவர்களில் **30** சதவிகிதத்தினர் பெண்களாவர். நாட்டிலுள்ள அனைத்து பெண் சார்பு ஆய்வாளர்களில் நான்குபேரில் ஒருவர் தமிழக காவல்துறையில் பணிபுரிகின்றனர். இந்தியாவிலுள்ள அனைத்து பெண் காவல் ஆளிநர்களில் ஏழு பேரில் ஒருவர் தமிழக காவல்துறையில் பணிபுரிகின்றனர்.

மாநிலத்திலுள்ள பெண் காவல் பணியாளர்கள், கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துதல் அல்லது குற்ற விசாரணை மேற்கொள்ளுதல் அல்லது போக்குவரத்தை சீர்செய்தல் போன்ற எந்த பணியாக இருந்தாலும் ஆண்களுக்கு இணையாக பணியாற்றுகின்றனர். இவ்வாறான கடினமான பணிகளில் பெண்கள் தங்கள் தனித்துவத்தை நிலைநிறுத்திக்கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது பெருமைப்படத் தக்கதாகும்.

## IX. காவல்துறையில் சிறப்புப் பிரிவுகள்

### i) குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை

1906–ஆம் ஆண்டு, காவல்துறை துணைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் 37 காவல் பணியாளர்களைக் கொண்ட ஒரு சிறிய அலகாக குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை தொடங்கப் பட்டது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, தற்போது கூடுதல் காவல்துறை இயக்குநர் (குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை) தலைமையின் கீழ், சுமார் 686 காவல் பணியாளர்களுடன் ஓர் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையில், 37 உட்பிரிவுகளைத் தவிர, ஏழு திட்டமிட்ட குற்றங்கள் தடுப்பு பிரிவுகளும், நான்கு கள்ளநோட்டுகளை கண்டறியும் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. சிறப்பு புலன்விசாரணைப் பிரிவு, கணினிசார்

குற்றப்பிரிவு, ஆட்கடத்தல் தடுப்புப்பிரிவு, காவல் ஆராய்ச்சி மையம் ஆகியன இதர சிறப்புப் பிரிவுகளாகும். தமிழக அரசு, தமிழக காவல்துறை இயக்குநர் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஒப்படைக்கும் வழக்குகளை புலன்விசாரணை செய்வதே குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையின் முக்கிய பணியாகும். 2013–ஆம் ஆண்டில், இத்துறையில் ஏற்கனவே நிலுவையில் உள்ள 243 வழக்குகளுடன், கூடுதலாக 112 வழக்குகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில், 181 வழக்குகளில் புலன்விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையானது, ஆட்கடத்தல் குற்றத்தை கையாளும் மைய அமைப்பாகச் செயல்படுவதோடு, இத்தகைய சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

## ii) குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்பு புலன் விசாரணைப் பிரிவு உருவாக்கம்

அடிப்படைவாத செயல்களைக் கட்டுப்படுத்தவும், மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளை விரைந்து புலன்விசாரணை செய்யவும், சிறப்புப் புலன்விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டது. சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவானது, ஒரு காவல் கண்காணிப்பாளர், இரண்டு காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், ஒன்பது காவல் ஆய்வாளர்கள், ஏழு காவல் உதவி ஆய்வாளர்கள், 15 தலைமைக் காவலர்கள் மற்றும் 80 முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை காவலர்களைக் கொண்டு இது இயங்கி வருகிறது.

வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் இந்து அமைப்பு நிர்வாகிகள் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னர், சிறப்புப் புலன்விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது, மேற்குறிப்பிட்ட வழக்குகளில் தொடர்புடைய மத அடிப்படைவாதிகளும்,

தலைமறைவாக இருந்தவர்களுமான பக்ரூதீன், பிலால் மாலிக் மற்றும் பன்னா இஸ்மாயில் ஆகியோரைக் கைது செய்து, வேலூரில் டாக்டர் அரவிந்த் ரெட்டி மற்றும் பரமக்குடியில் திரு.முருகன் ஆகியோரது கொலை மற்றும் இதர வழக்குகளிலும் இவர்களுக்கு தொடர்பு இருப்பதை இப்பிரிவு உறுதி செய்தது. மேலும், மேலப்பாளையம் மற்றும் புத்தூர் (ஆந்திர மாநிலம்) ஆகிய இடங்களிலிருந்து பெருமளவிலான வெடிபொருட்களை இப்பிரிவு பறிமுதல் செய்தது.

மிகக்குறுகிய காலத்திலேயே இச்சிறப்புப் புலன்விசாரணைப் பிரிவானது, முக்கிய அடிப்படைவாத வழக்குகளை புலன்விசாரணை செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. இப்பிரிவானது, தொய்வில்லாத மற்றும் திறமையாக மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக கீழ்க்கண்டவை சாத்தியமாயிற்று.

அ) திருநெல்வேலி மாவட்டம், மேலப் பாளையத்தில் வெடிபொருட்கள் பறிமுதல் செய்தது.

ஆ) வேலூர், சேலம், மதுரை மற்றும் பரமக்குடி ஆகிய இடங்களில் மதத்தலைவர்கள் கொலை செய்யப்பட்ட வழக்குகளை கண்டுபிடித்தது.

இ) மதுரைக்கு முக்கியப் பிரமுகர் ஒருவரின் வருகையின்போது, வெடிகுண்டு வைக்கப் பட்டது தொடர்பான வழக்குகளை கண்டு பிடித்தது.

சிறப்புப் புலன்விசாரணைப் பிரிவு மேற்கொண்ட திறமையான நடவடிக்கைகளின் காரணமாக, தீவிர மதஅடிப்படைவாதியான பக்ரூதீன் சென்னையிலும், பிலால் மாலிக், பன்னா இஸ்மாயில் ஆகியோர் ஆந்திர மாநிலம் புத்தூரிலும் கைது செய்யப்பட்டனர். அடிப்படைவாதிகள் தொடர்புடைய புலன்விசாரணை மற்றும் வழக்குகள் நடத்தப் படுவதை பலப்படுத்தும் நோக்கில் சிறப்பு புலன்விசாரணை பிரிவிற்கு மறு பரவலமர்த்தம் மூலம் 76 பணியாளர்களை நியமிக்கவும், இப்பிரிவின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் அரசாணை (டி) எண்.132,

உள் (காவல்—12) துறை, நாள்.24.02.2014—ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையில் கணினிசார் குற்றப்பிரிவை வலுப்படுத்தும் நோக்கில், இப்பிரிவிற்கு உரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் சாதனங்களை வழங்க அரசாணை (நிலை) எண்.344, உள்(காவல்—12) துறை, நாள்.13.05.2014—ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

### iii) <u>குற்றப் பிரிவு</u>

குற்றப் பிரிவில் கீழ்க்கண்ட அலகுகள் உள்ளன.

#### அ) <u>போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (NIB)</u>

போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது 1985—ஆம் ஆண்டைய போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை திறம்பட அமல்படுத்தி, அதன்

மூலம் போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் மற்றும் புழக்கத்தைத் முற்றிலும் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. தற்போது, மாநிலம் முழுவதும் **15** பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. **2013**–ஆம் ஆண்டில், **1687** வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, **1707** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், **3.99** கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, **18** குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் **14/1982**ன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

### ஆ) காணொலித் திருட்டுத் தடுப்புப் பிரிவு (VPC)

காணொலித் திருட்டைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமைச் சட்ட மீறலை கண்காணிக்கவும், **17.02.1995** அன்று காணொலி திருட்டுத் தடுப்புப் பிரிவு என்ற ஒரு தனிப்பிரிவு தொடங்கப்பட்டது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம்,

திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் இப்பிரிவுகள் உள்ளன.

**2013** ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட **3,020** வழக்குகளில், **3,004** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ரூ.**36.58** கோடி மதிப்பிலான திருட்டு குறுந்தகடுகள்/ காணொலி குறுந்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஏழு நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டனர்.

## iv) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவுகள் (EOW)

### அ) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு (CCIW)

கூட்டுறவுச் சங்கங்களில் பண முறைகேடு மற்றும் நிதிக் கையாடல் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு சிறப்பு பிரிவாக வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு **1971**–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **2013**–ஆம் ஆண்டில், **40** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, **25** வழக்குகளில்

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், முடிக்கப்பட்ட 79 வழக்குகளில், 67 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 84.81 சதவீத வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

## ஆ) சிலை திருட்டு தடுப்புப் பிரிவு

சிலை திருட்டு தடுப்புப் பிரிவு 1983–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது i) தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு, ii) 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமைவாய்ந்த சிலைகள் திருட்டு, iii) மாநில அளவிலும் / மாநிலங்களுக்கு இடையிலும் தொடர்புடைய சிலைகள் திருட்டு வழக்குகள், iv) 1995 ஆம் ஆண்டைய நிலவரப்படி, ரூபாய் ஐந்து இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு மற்றும் v) கூர் உணர்வுடைய சிலைகள் திருட்டு ஆகியவற்றை புலன் விசாரணை செய்து வருகிறது.

2013–ஆம் ஆண்டில், நான்கு சிலை திருட்டு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 14 கொடுங் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ஐந்து தொன்மை வாய்ந்த சிலைகள் மீட்கப்பட்டன.

வழக்குகளைக் கண்டுபிடிப்பது மற்றும் புலன்விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் பதிவாகியுள்ள சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு கண்காணிக்கிறது. திருக்கோவில் பாதுகாப்புப் படையினரின் செயல்பாடுகளையும் இப்பிரிவு மேற்பார்வையிடுகிறது.

தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா மற்றும் இதர நாடுகளுக்கு சிலைகளைக் கடத்தியதற்காக ஜெர்மன் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட குற்றவாளி ஒருவர் தொடர்ந்து நீதி விசாரணையை சந்தித்து வருகிறார். இவரால் திருடப்பட்டு, கடத்தப்பட்ட எட்டு சிலைகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய

நாடுகளின் கலைக் கூடங்கள் மற்றும் அருங்காட்சியகங்களில் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டன.

## **இ) <u>பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2</u>**

வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெறும் மோசடிகள், குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன்விசாரணை செய்யும் முக்கியப் பணியினை பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2 (நிதி நிறுவனங்கள்) மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு தமிழ்நாடு நிதி நிறுவன முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளையும் கையாண்டு வருகிறது.

2013–ஆம் ஆண்டில், இப்பிரிவு 7,174 முதலீட்டாளர்களுக்கு ரூ.53.94 கோடி அளவிலான தொகையை மீட்டுத் தந்துள்ளது. மூன்று வழக்குகள் தண்டனையில் முடிந்தன. இதே ஆண்டில்,

41 நிகழ்வுகளில், ரூ.45.93 கோடி மதிப்பிலான சொத்துக்களை முடக்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம், தகுதியுள்ள அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அதிகாரிகள், முடக்கப்பட்ட சொத்துக்களை ஏலம் விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவற்றில் கிடைக்கும் தொகையை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்க முடியும்.

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, அவர்களுடன் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய கூட்டங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் உற்சாக வரவேற்பைப் பெற்றதுடன், அவர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

## v) செயலாக்கப் பிரிவு

பல்வேறு தேவைகளுக்காக சிறப்பு பயிற்சி பெற்ற ஆளிநர்களை (அதிரடிப்படை வீரர்கள்) தயார் நிலையில் வைத்திருப்பது மற்றும் பயிற்சி அளிப்பது போன்ற தேவைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளியும் இப்பிரிவில் அடங்கும்.

### அ) தமிழ்நாடு அதிரடிப் படை

**1991–**ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கி வந்த சிறப்பு பாதுகாப்பு குழு மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி ஆகிய பிரிவுகள் உருவாக்கப்பட்டன. இவை, காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அதிரடிப்படையானது, பயங்கரவாத சம்பவங்களை தனது அதிரடி நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தும் ஓர் உயர் பிரிவாகும். துரித நடவடிக்கை குழுவையும்

(Quick Reaction Team) தமிழ்நாடு அதிரடிப்படை வழங்கி வருகிறது. மேலும், இப்பிரிவு, அவசர கால நிலைமைகளை எதிர்கொள்வதற்கான பல்வேறு ஒத்திகை பயிற்சிகளில், தேசிய பாதுகாப்புப் படையினருடன் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

துரித நடவடிக்கை குழுவினருக்கு பயிற்சி அளிப்பதற்கென, தமிழ்நாடு அதிரடிப்படைக்கு, மென் பயிற்சி துப்பாக்கிகள் வாங்க அரசாணை (நிலை) எண்.320, உள் (காவல் XIII) துறை, நாள். 07.05.2014–ன்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

## ஆ) <u>தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி</u>

தமிழக காவல்துறையில் பணிபுரியும் ஒரு ஆண்/பெண் காவலரை அதிரடிப்படை வீரராகத் தயார்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளைத் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி அளித்து வருகிறது. ஆயுதங்களைக் கையாளுதல், தந்திர நடவடிக்கைகளுக்கான பயிற்சி, நவீனரக

ஆயுதங்களைக் கையாளுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் நுணுக்கம், காவல்துறையைச் சேர்ந்த மோப்ப நாய்கள் மற்றும் அவைகளை கையாள்பவர்களுக்கு பயிற்சி, மறைந்திருந்து துப்பாக்கிச் சுடும் பயிற்சி மற்றும் இதர பாடப் பயிற்சிகளும் இப்பள்ளியில் அளிக்கப்பட்டு வருகின்றன. **2013–**ஆம் ஆண்டு, தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியில், **2,220** காவல் பணியாளர் களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

## இ) <u>வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை</u>

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படையானது **1991–**ல் உருவாக்கப்பட்டது. **2013–**ஆம் ஆண்டில், இப்படையினர் **644** நிகழ்வுகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## ஈ) தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின் மோப்ப நாய்ப் பிரிவு

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியில் மோப்ப நாய்ப்பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. 2013–ஆம் ஆண்டில், சதிச் செயல்கள் தடுப்பு மற்றும் வெடிகுண்டு குறித்த தொலைபேசி மிரட்டல்கள் போன்ற 1325 நிகழ்வுகளில் மோப்ப நாய்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

## vi) நுண்ணறிவுப் பிரிவு

மாநில நுண்ணறிவுப் பிரிவானது, பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், ஒன்றிணைத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் திட்டமிட்ட

குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு ஆகியன இயங்கி வருகின்றன. இப்பிரிவானது, காவல்துறை இயக்குநர் (நுண்ணறிவு) தலைமையின் கீழ், இரண்டு காவல்துறைத் தலைவர்கள், ஒரு காவல்துறை துணைத்தலைவர், ஏழு காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் இதர அலுவலர்களின் உதவியோடு மாநில தலைமை அலுவலகத்திலும், களப்பணிகளுக்காக மாவட்ட அளவிலும் செயல்பட்டு வருகிறது.

## அ) <u>தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை</u>

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையானது நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதுடன், பொது சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்க அனைத்து நிலைகளிலும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முன்கூட்டியே தொடர்புடையவர்களுக்கு அத்தகவல்களை பகிர்ந்தளிக்கிறது.

தகவல்களை எளிதாக மீட்டெடுக்க தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையில் ‘இலக்க கோப்பு

நிருவாக முறை'யை (Digital File Management System) ஏற்படுத்தும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.331, உள் (நவீனம்) துறை, நாள்.08.05.2014ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

## ஆ) **பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை**

தமிழகத்திற்கு வருகைதரும் அயல்நாட்டு அதிபர்கள், இதர பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதி மிகமுக்கிய / மிகமுக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு தவிர, தமிழ்நாட்டிலுள்ள மிகமுக்கிய நபர்கள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமின்றி, அயல் நாட்டவர் நடவடிக்கை, முக்கிய கேந்திர அமைப்புகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கடவுச்சீட்டு தொடர்பான நடவடிக்கை களையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது. **2013–**ஆம் ஆண்டில், ஜப்பான் மன்னர், இந்திய குடியரசுத்

தலைவர், இந்திய குடியரசு துணைத் தலைவர், பாரத பிரதமர் போன்ற அதி மிகமுக்கிய நபர்கள் மற்றும் மிகமுக்கிய நபர்களும், உயர் அச்சுறுத்தல் உள்ள திரு. எல்.கே.அத்வானி மற்றும் திரு.நரேந்திரமோடி போன்ற தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோதும், இப்பிரிவினர் அவர்களுக்கு இதர பாதுகாப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இப்பிரிவின் பாதுகாப்பு சாதனங்களை பழுது பார்க்கும் பொருட்டு சிறப்பு நிதியாக ரூ.50 லட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண்.154, உள் (காவல்.12) துறை, நாள்.24.02.2014ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

## இ) முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பிற்கென இப்பிரிவு உருவாக்கப்பட்டு, குற்றப் புலனாய்வுத்துறை பாதுகாப்புப் பிரிவுடன் இணைக்கப் பட்டது. இப்பிரிவானது, மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் தங்குமிடம், சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இடங்கள், வாகன அணிவகுப்பு ஆகியவற்றின்போது, **24** மணி நேரமும் தவறு ஏதும் நிகழாமல் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், நெருங்கிய பாதுகாப்பு குழுக்கள், வெடிகுண்டை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு மற்றும் தொழில் நுட்பப்பிரிவு ஆகியன அடங்கியுள்ளன.

## ஈ) <u>திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு</u>

திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளி கும்பல், போக்கிரிகள், போதை பொருட்கள் கடத்தல், ஆயுதம் மற்றும் வெடி மருந்துப் பொருட்கள் கடத்தல், ஆட்கடத்தல், ஹவாலா பணப் பரிவர்த்தனைகள், கள்ளநோட்டு புழக்கங்கள் போன்ற நடவடிக்கைகள் குறித்து, பயனுள்ள நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, களப்

பணியாளர்களுக்கு அத்தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்ள இப்பிரிவு உருவாக்கப்பட்டது.

## உ) ‘க்யூ’ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

**1967–1970**–ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டில் நக்சலைட் நடவடிக்கைகள் தலைதூக்கியபோது, தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், ஒரு தனிப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை–**2** என்று இருந்த இப்பிரிவானது, **1976**–ஆம் ஆண்டு ஜூலை மாதம் ‘க்யூ’ பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யும் அதிகாரம், இப்பிரிவிற்கு வழங்கப்பட்டது. ‘க்யூ’ பிரிவு அலகுகள், காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டன. ‘க்யூ’ பிரிவு, இலங்கை தமிழர்கள் தொடர்பான விவகாரங்களையும் கையாண்டு வருகிறது. தூத்துக்குடி அருகில் இந்திய கடல் எல்லைக்குள் எம்.வி. சீமேன் கார்டு ஓகியோ

என்ற கப்பல் ஊடுருவியது தொடர்பான வழக்கின் புலன் விசாரணையையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. மேலும், மதுரையில், இடதுசாரி தீவிரவாதக் குழுக்கள் வெடிகுண்டு வைத்த வழக்கின் புலன்விசாரணையையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## ஊ) <u>சிறப்புப் பிரிவு</u>

சிறப்புப் பிரிவானது, மத அடிப்படைவாத அமைப்புகளை கண்காணித்து வருகிறது. இப்பிரிவு, நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்களைத் திரட்டி, அவற்றை மாவட்ட காவல்துறைக்கு பகிர்ந்தளித்து வருகிறது.

## vii) <u>தொழில்நுட்பப் பணிகள்</u>

தொழில்நுட்பப் பணிகள் பிரிவானது, காவல்துறையினரின் அன்றாட செயல்பாட்டிற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

வசதிகளை செய்து தருவதுடன், இயற்கை சீற்றங்களின்போது கூடுதல் தகவல் தொடர்புகளை வழங்கி வருகிறது. இப்பிரிவில், (i) தொழில்நுட்பப் பிரிவு, (ii) செயலாக்கப் பிரிவு என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன.

தொழில்நுட்ப பணிகள் பிரிவிற்கு, 710 தொழில்நுட்ப அலுவலர்களுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் கணினிகளை பராமரித்தல், புதிய திட்டங்கள் அமலாக்கம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளின் தரஆய்வு மதிப்பீடு செய்தல் போன்ற பணிகளை இப்பிரிவினர் கவனித்து வருகின்றனர். இத்தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பானது முற்றிலும் காவல் துறையினரால் பயன்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இது குரல் வழி தகவல் அளித்தல் மற்றும் தரவு பரிமாற்றம் ஆகியவற்றை வழங்குகிறது. தகவல் பரிமாற்றத்திற்காக, அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவல்துறையின் பிற

அலகுகள், பரவலாக்கப்பட்ட வலைப்பின்னல் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

## அ) 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட திட்டங்கள்

காவல்துறையின் அர்ப்பணிக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட வலைப்பின்னல் இணைப்பானது, மின்னஞ்சல் சேவையகம் (Server) உள்ளடக்கிய புதிய சேவையகங்கள் மற்றும் அதற்கான மென்பொருட்கள் 41 லட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2013–ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில், தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்களைக் கொண்ட மென்பொருள் மேம்படுத்துதல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவானது, பல மென்பொருள் பயன்பாடுகளான ஹெட் குவார்டர்மாஸ்டர்(Head Quartermaster), இன்பார்ம்–அஸ் (In-FORM-Us), காவல் தொலைத் தொடர்பு பிரிவிற்கான

டபிள்யூஎஸ்ஆர் (WSR for PTB), ஆவணக் காப்பகத்தை மேம்படுத்தும் மென்பொருள், SBCID DSR, CCTNS Tracker, உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு மேலாண்மை மென்பொருள் (CUG Management Software) ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. மேலும், இப்பிரிவு ஆன்ட்ராய்ட் பயன்பாடு மேம்பாட்டிலும் பயிற்சி பெற்றுள்ளது.

**2013**–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூ.**9.9** லட்சம் செலவில் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்திற்கு நுண்ணலை தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டது.

தலைமை அலுவலகத்தில் முன்னர் இருந்த உட்பகுதி வலைபின்னல் இணைப்பானது, கேட்–**5** கம்பிவடங்களால் இணைக்கப்பட்டிருந்ததால் அடிக்கடி பழுதடைந்தது. ஆகையால், **12.2.2014** அன்று

ரூ.**6.6** லட்சம் செலவில், சுவிட்ச் வசதியுடன் கூடிய ஆப்டிகல் ஃபைபர் கேபிள்கள் அமைக்கப்பட்டன.

மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு 2.3 GHz - 2.5 GHz அலைவரிசையில் அமைக்கப் பட்ட நுண்ணலை இணைப்பானது ரூ.**9.93** லட்சம் செலவில் **5.8** GHz ஆக உயர்த்தப்பட்டது.

மாஞ்சோலையிலுள்ள உயர்வேக நுண்ணலை தகவல் தொடர்பு மறு அஞ்சல் நிலையமானது, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதியில் தகவல் தொடர்பு வசதியை அளித்து வருகிறது. இந்நிலையம், பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால், இதற்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. எனவே, மாஞ்சோலை மறுஅஞ்சல் நிலையத்திற்கு காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூபாய் ஐந்து லட்சம் செலவில் சூரிய ஒளி மின் சக்தி ஏற்படுத்தி தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பணி **2014** மார்ச் மாதத்தில் நிறைவு பெற்றது.

## ஆ) ஒப்பளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறை (CCTNS - Crime and Criminals Tracking Network System) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூ.32.52 லட்சம் வழங்கப்பட்டு, அதன் மூலம் 13 காவல்நிலையங்களுக்கு சூரியஒளி சக்தியை தேவைப்படும்போது மின்சாரமாக பயன்படுத்தக்கூடிய இயந்திரங்கள் வழங்கப்பட்டு, அவை நிறுவப்பட்டன. அதேபோன்று, 10 மலைப்பகுதியில் அமைந்துள்ள மறுஅஞ்சல் நிலையங்களுக்கு சூரியஒளி மின்சக்தி வழங்கும் நிலையங்கள் அமைப்பதற்காக காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூ.65.43 லட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அதை நிறுவும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தொலைதூரத்திலுள்ள 30 காவல் நிலையங்களுக்கு சூரியஒளி மின்சக்தி வழங்கும் இயந்திரங்களை

அமைப்பதற்காக காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூ.105 லட்சம் வழங்கப்பட்டு, அவற்றை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு காவல்துறையில், 15 கிரிப்டோ (Crypto) மையங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. தானியங்கி இயந்திர சைஃபர் திட்டத்திற்காக ரூ.17 லட்சம் செலவில் 34 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

27.11.2013–ம் நாளிட்ட, உள் (காவல்.14) துறை, அரசாணை (நிலை) எண்.1033–ல் ஒருங்கிணைக்கப் பெற்ற உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டத்திற்காக ரூ.3.47 கோடியை எனது அரசு ஒப்பளித்திருக்கிறது. தனித்தன்மைவாய்ந்த, வரலாற்று சிறப்புமிக்க இத்திட்டத்தினால், தமிழ்நாடு காவல்துறையின் அமைச்சுப் பணியாளர்கள் உட்பட அனைத்து நிலையிலுள்ள 1.2 லட்சம் காவல் பணியாளர்களும் பயனடைவர். காவல் பணியாளர்

களின் குடும்ப உறுப்பினர்களும் தங்களது சொந்த செலவில் இத்திட்டத்தில் சேருவதற்கான வாய்ப்புமுள்ளது. காவல் நிலையப் பணியாளர்கள் தங்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ள காவல் நிலையங்கள், உட்கோட்ட அலுவலகங்கள், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் தனிப்பிரிவு அலுவலகங்கள் ஆகியவற்றில் **1,819** நிரந்தர கம்பியில்லா தொலைபேசி சாதனங்கள் நிறுவப்பட உள்ளன. இதற்காக, தமிழ்நாடு காவல்துறை மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் தொலைபேசித்துறை ஆகியவற்றிற்கு இடையே **14.02.2014** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி காவல் ஆணையரகங்கள் மற்றும் காஞ்சிபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ரூ.72 கோடி செலவில் இ–சலான் முறை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

காவல் கணினி தொடர்பு மையத்தில் பயிற்சி வகுப்புகளை நடத்திட ஆண்டிற்கு ரூபாய் ஐந்து லட்சம் சுழல் நிதியாக, அரசாணை (நிலை) எண்.185 உள் (காவல்.9) துறை, நாள் 25.02.2014–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**இ) ஆளில்லா விமானம் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்**

காவல்துறையின் குறிப்பிட்ட சில தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்காக 03.03.2014 அன்று அண்ணா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு:

i. அறிவுசார் தகவல் பரிமாற்றம் – பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து பிரிவுகளிலும் காவல்துறைஅதிகாரிகள்/ஆளிநர்களுக்கு பயிற்சி அளித்தல்.

ii. <u>திட்ட வடிவமைப்பதில் உதவி புரிதல்</u> –

தமிழ்நாடு காவல்துறை பல்வேறு தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களை தயாரித்து வருகிறது. இத் திட்டங்களை வடிவமைப்பதிலும் மற்றும் வடிவமைப்பு பிரச்சனைகளை சீர்செய்வதிலும், அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாடு காவல் துறைக்கு உதவிபுரியும்.

iii <u>ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள்</u> –

தமிழ்நாடு காவல்துறை, அண்ணா பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து களப்பணிக்கான சாதனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டினை மேற்கொள்ளும். இந்தியாவில் முதன் முறையாக, ஆளில்லா விமானத்தை வடிவமைக்கும் ஒரு திட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது.

## ஈ) ஆளில்லா விமானம்

கூட்டத்தைக் கையாளுதல், வழித்தடம் அல்லது குறிப்பிட்ட பகுதியைக் கண்காணித்தல், வனப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்துதல் போன்றவற்றிற்காக, எனது அரசு, அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து மூன்று ஆளில்லா விமானங்கள் வாங்குவதற்காக, அரசாணை (நிலை) எண்.1141, உள் (காவல் 11) துறை, நாள்.11.12.2013–ன் மூலம் ரூபாய் 95 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஆளில்லா விமானமானது, எவ்வகை நிலப்பரப்பிலும் பயணிக்கக்கூடியதாகவும், திசை அறியமுடியாத பகுதிகளிலும், கடும் அச்சுறுத்தல் உள்ள இடங்களிலும் இயக்குவதற்கு ஏதுவானதாகும். இந்த ஆளில்லா விமானத்தை தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து அதன் தேவைக்கேற்ப தானியங்கி முறை அல்லது கைகளால் இயக்கப்படும் முறையிலும் இயக்கலாம். இந்த ஆளில்லா விமானம் குறிப்பிட்ட

உயரத்தில், 20 நிமிடங்களுக்கு பறந்த நிலையில் துல்லியமாக காணொலிப் பதிவுகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.

அண்ணா பல்கலைக்கழகம் தயாரித்த இந்த முன்மாதிரி சாதனமானது, இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவர் குருபூஜை மற்றும் இம்மானுவேல் சேகரன் நினைவு தினம் போன்ற முக்கிய நிகழ்வுகளின்போது சட்டம்–ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது. இந்த ஆளில்லா விமானமானது, திருவண்ணாமலை கார்த்திகை தீப விழாவின்போதும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டது. மேலும், இந்த ஆளில்லா விமானமானது, காஞ்சிபுரம் மாவட்டம் சிறுசேரியில் நிகழ்ந்த பரபரப்பான குற்றச் சம்பவ இடத்தில் சாட்சியங்களைக் கண்டறிவதற்கும் உதவி புரியும் சாதனமாக பயன்படுத்தப்பட்டது.

## உ) <u>கம்பியில்லா இணைப்பு தொழில் நுட்பம்</u> <u>(WI-FI Technology)</u>

எனது அறிவிப்பிற்கிணங்க, காவல்துறையில் தொலைத் தொடர்பு வசதிகளை மேம்படுத்திட, உயர் அலைவரிசை தரவு வலைப்பின்னல் அமைக்க அரசாணை (டி) எண்.133, உள் (நவீனம்) துறை, நாள்.25.02.2014–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் அரசாணை (டி) எண்.134, உள் (நவீனம்) துறை, நாள் 25.02.2014–ல் 300 அதி உயர் அலைவரிசை நிலை கருவிகள், 600 அதி உயர் அலைவரிசை நடமாடும் கருவிகள், 1200 கையடக்க கருவிகள் மற்றும் 128 அதி உயர் அலைவரிசை மறுஅஞ்சல்கள் ஆகியவற்றை வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

## viii) <u>சிறப்பு இலக்குப் படை</u>

சிறப்பு இலக்குப் படையானது 1993–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **அ)** சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளை கைது

செய்யவும், **ஆ)** ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை கையாளவும், **இ)** விமானக் கடத்தல் மற்றும் பிணைத்தொகைக்காக ஆட்கடத்தல் வழக்குகளைக் கையாளவும் மற்றும் **ஈ)** இயற்கைப் பேரழிவுகளின் போது உதவி புரியவும் இது ஏற்படுத்தப்பட்டது. 2004–ஆம் ஆண்டு வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்ட பிறகு, இப்படைக்கு கீழ்க்கண்ட பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. i) வனப்பகுதி சரணாலயங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், ii) மலைவாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் iii) காடுகளை தீவிரவாதிகள் தங்கள் புகலிடமாக பயன்படுத்திக் கொள்ளாமல் தடுத்தல்.

மேலும், 2013–ஆம் ஆண்டில், 248 தேடுதல் பணிகளும், 44 மறைந்திருந்து தாக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு இலக்குப் படையானது, இதுவரை 200–க்கும் மேற்பட்ட வழக்குகளைக்

கண்டுபிடித்ததுடன், விலங்குகளை வேட்டையாடுதல், சட்ட விரோதமாக மரங்களை வெட்டுதல், சட்டவிரோதமாக துப்பாக்கிகள் மற்றும் போதைப் பொருட்கள் வைத்திருத்தல் போன்ற குற்றங்களில் தொடர்புடைய **600–க்கும்** மேற்பட்ட நபர்களை கைது செய்துள்ளது. இப்படையானது, சுமார் **23,000** காவல் ஆளிநர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இதில், தேசிய காவல் உயர்பயிற்சியகம் அனுப்பிய **456** இந்திய காவல் பணி அதிகாரிகளும், **67** இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அதிகாரிகளும், மஹாராஷ்ட்ரா, திரிபுரா போன்ற இதர மாநிலங்களைச் சேர்ந்த காவல் பணியாளர்களும், மத்திய துணை இராணுவப் படையினரும், வனத்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

சமீபத்தில், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களும் இணைகின்ற எல்லைப் பகுதியான மும்முனை

சந்திப்பில், சிறப்பு இலக்குப் படை தனது கவனத்தை செலுத்த துவங்கியுள்ளது. இப்பகுதியில், சிறப்பு இலக்குப் படை தனித்தோ அல்லது அண்டை மாநிலங்களுடன் கூட்டுப் பயிற்சியில் இணைந்து கொண்டோ, தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறது.

இப்படையினரை ஊக்குவிக்கும் பொருட்டு, கடினப்பணி படியாக மாதம் ரூ.900/– வழங்க அரசாணை (நிலை) எண்.156, உள் (காவல் VIII) துறை, நாள்.24.02.2014–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ix) <u>சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்</u>

**1955–**ஆம் ஆண்டைய குடிமையியல் உரிமை பாதுகாப்புச் சட்டம், **1989–**ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் மற்றும் **2014–**ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு

எதிரான வன்கொடுமைத் தடுப்பு திருத்த அவசரச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அளிப்பது போன்ற பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. தற்போது, **31** மாவட்டங்கள் மற்றும் ஆறு காவல் ஆணையரகங்களில், **37** நடமாடும் காவல் படைகள் அல்லது சமூக நீதி மற்றும் மனித உரிமை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் குறித்த கணக்கெடுப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கென **31** புள்ளியியல் ஆய்வாளர்கள் பல்வேறு அலகுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**2013**–ஆம் ஆண்டு, **1989**–ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ், 1,633 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

2013–ஆம் ஆண்டு, 1955–ஆம் ஆண்டைய குடிமையியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989–ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்களின் சிறப்பியல்கள் குறித்து 933 காவல்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் தேவையை நிறைவேற்றும் வகையில், இந்நீதிமன்றங்களை அமைக்க அரசாணை (நிலை) எண்.793, உள் (நீதிமன்றங்கள் II) துறை, நாள்.07.10.2013–ன்படி ரூ.1,69,26,000/– ஒப்பளிக்கப்பட்டது. மேலும், திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும்

கன்னியாகுமரியில் நான்கு சிறப்பு அரசு வழக்குரைஞர்களை பணியமர்த்த அரசாணை (நிலை) எண்.456, உள் (நீதிமன்றங்கள்.VIA) துறை, நாள். 05.07.2013–ன்கீழ் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், தண்டனையில் முடிக்கப்பட்ட 18 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு ஏழாண்டு காலம் கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரையிலான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்கொடுமையினால் பாதிப்புக்குள்ளாகும் கிராமங்களைக் கண்டறியும் கணக்கெடுப்பு பணியை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் மேற்கொள்கின்றனர். வன்கொடுமையைத் தடுப் பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இது உறுதுணையாக அமைகிறது. 2013–ஆம் ஆண்டு, 186 கிராமங்கள் வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள கிராமங்களாக கண்டறியப்பட்டன.

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு, மாவட்ட ஆட்சியர்கள் நிதி நிவாரணம் அளிப்பது குறித்த கருத்துருக்களை இப்பிரிவினர் கண்காணித்து வருகின்றனர். **2011** முதல் **2013** வரையிலான காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள் பின்வருமாறு:—

| **வருடம்** | **வழக்குகள் எண்ணிக்கை** | **பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை** | **தொகை ரூபாய் (கோடியில்)** |
|---|---|---|---|
| 2011 | 770 | 1,600 | 2.41 |
| 2012 | 652 | 1,120 | 1.89 |
| 2013 | 746 | 1,342 | 3.83 |

தருமபுரி மாவட்டத்தில் நிகழ்ந்த கலவரம் மற்றும் தீ வைத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட **325** பேருக்கு, மொத்தம் ரூ.**13,25,31,265/—** நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் ஏற்பட்ட கலவரம் காரணமாக 10 குடிசைகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 32 பேருக்கு, மொத்தம் ரூ.10,05,000/– நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் பாப்பாங்குளத்தில் ஆதிதிராவிடர்களின் 26 வீடுகள் சேதப்படுத்தப் பட்டதையடுத்து, பாதிக்கப்பட்ட 26 பேருக்கு, மொத்தம் ரூ.40,60,000/– அளவிற்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினை பலப்படுத்தும் வகையில், காவல்துறை உதவித் தலைவர் பணியிடம் ஒன்றை உருவாக்க அரசாணை (நிலை) எண்.189, உள் (காவல் I) துறை, நாள்.25.02.2014–ன்படி ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

## x) <u>காவல் பயிற்சி</u>

### அ) <u>பயிற்சி தலைமையகம்</u>

**1896**–ஆம் ஆண்டுக்கு முன்னரே வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி துவக்கப்பட்டு, பின்னர், **1905**–ஆம் ஆண்டு காவலர் பயிற்சி கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. பின்னர், இக்காவலர் பயிற்சி கல்லூரி **1976**–ஆம் ஆண்டு சென்னை அசோக்நகருக்கு மாற்றப்பட்டது. பின்னர், காவலர் பயிற்சி கல்லூரி, காவல் உயர் பயற்சியகமாக தரம் உயர்த்தப்பட்டு, தற்போது வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் செயல்பட்டு வருகிறது.

வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடியில் உள்ள பேரூரணி, ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய எட்டு நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளின் பயிற்சி நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தலைமையிடமாக சென்னை அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரி

செயல்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வொரு சரகம் / நகரங்களில் செயல்பட்டு வரும் 13 பணியிடை பயிற்சி மையங்களும் காவல்துறை கூடுதல் இயக்குநர், பயிற்சி, அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

ஆவடி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் காவலர் பயிற்சி பள்ளி வளாகங்களை கட்டுவதற்காக, முறையே, 11.82 கோடி ரூபாய் மற்றும் 12.71 கோடி ரூபாய்க்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பை இவ்வரசு வழங்கியுள்ளது.

விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் காவலர் பயிற்சி பள்ளி வளாகங்களை கட்டுவதற்காக, முறையே, 12.28 கோடி ரூபாய் மற்றும் 12.24 கோடி ரூபாய்க்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பை இவ்வரசு வழங்கியுள்ளது.

அரசாணை (நிலை) எண் 171, உள் (காவல்–10) துறை, 25.02.2014–ம் நாளிட்ட ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், பணியிடை பயிற்சி

மையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காவலர் பயிற்சிக் கல்லூரி, பணியிடைப் பயிற்சி மையங்கள் மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளிகளில் 38 கோடி ரூபாய் செலவில் பயிற்சிக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## ஆ) தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம்

காவல் உயர்பயிற்சியகமானது, காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு மேலான பதவிகளிலுள்ள அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதில் முன்னோடி காவல் பயிற்சி நிறுவனமாக விளங்கி வருகிறது. இதுவரை, 59 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 1,823 காவல் உதவி ஆய்வாளர்கள், 201 காவல் தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள், புதுச்சேரி மற்றும் திரிபுரா மாநிலங்களிலிருந்து 109 காவல் உதவி

ஆய்வாளர்கள், 147 தரவு பதிவாளர்கள் உள்ளடக்கிய 16,889 அதிகாரிகளுக்கு இவ்வுயர் பயிற்சியகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 3,395 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சியும், காவல் உதவி ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 11,155 அதிகாரிகளுக்கு சிறப்பு பாடங்கள் /சிறப்பு வகுப்புகள் மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

2013–ஆம் ஆண்டு, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் நிலையில் உள்ளவர்களுக்கும், தரவு பதிவாளர்கள் உட்பட மொத்தம் 2,582 அதிகாரிகளுக்கு இவ்வுயர் பயற்சியகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

2013–2014–ஆம் ஆண்டில், பயிற்சி நடத்துவதற்காகவும், அது தொடர்பான பயிற்சி

உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்காகவும், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்திற்கு ரூபாய் 30 லட்சம் வழங்க அரசாணை (நிலை) எண்.527, உள் (காவல் XI) துறை, நாள்.17.07.2013–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## xi) <u>தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள்</u>

தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணியில், ஆவடியில் உள்ள படைக்கல மையம் உட்பட, 16 காவல் படை அணிகள் உள்ளன. தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 8–ம் அணியானது புது தில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் அயற்பணியில் உள்ளது. தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், தேர்தல் பணிகள் உட்பட பெரிய அளவிலான சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், பிற மாநிலத்திலும் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

காவல் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக, ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில், தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் கட்டுப்பாட்டில் மோட்டார் வாகனப் பராமரிப்பு பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு பணிமனைகளிலும், சுமார் 2,775 பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

57 காவல் குழலிசைப் பிரிவு காவலர்களுக்கு, காவல் குழலிசைப் பயிற்சி வழங்க அரசாணை (நிலை) எண் 821, உள் துறை, நாள்.09.10.2013–ன்படி ஆணை பிறக்கப்பட்டுள்ளது.

இரண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணிகளுக்கு நிர்வாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.336, உள் (காவல் X) துறை, நாள்.13.05.2014–ல் ஆணை வெளியிடப்பட்டது.

## xii) **கடலோர பாதுகாப்பு குழுமம்**

தமிழ்நாடு, 13 கடலோர மாவட்டங்கள் மற்றும் 591 மீனவ கிராமங்களை உள்ளடக்கிய 1,076 கிலோமீட்டர் நீளம் கொண்ட கடலோர எல்லைப் பகுதியை கொண்டுள்ளது. (1) எரிபொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதைத் தடுக்கவும் (2) தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும், (3) மீனவர்கள் மற்றும் போராளிகளுக்கிடையேயான கூட்டுச் சதி உருவாவது போன்றவற்றை தடுக்கவும், கடலோர பாதுகாப்பு குழுமம் 1994–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

சமீப காலம் வரை, கடலோர பாதுகாப்பு குழுமமானது கடலோரப் பகுதிகளில் சுற்றுக்காவல் மேற்கொள்ளுதல், சோதனைச் சாவடிகளில் வாகனங்களைச் சோதனையிடுதல் போன்ற

தரைபரப்பு பணிகளை மட்டுமே செய்து வந்தது. ஆறு மண்டல அலுவலகங்களும், 11 அலகுகளும், 60 சோதனைச் சாவடிகளும் அமைக்க 1994–ம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் கடலோர பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 12 கடல்சார் காவல் நிலையங்கள், 12 கடல்சார் புறக்காவல் மற்றும் 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. மேலும், கைத்துப்பாக்கிகள், LMG, INSAS துப்பாக்கிகள் போன்றவற்றுடன் கூடிய 12 டன் திறன் கொண்ட 12 படகுகளும், ஐந்து டன் திறன் கொண்ட 12 படகுகளும் இந்திய அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ், 30 கடல்சார் காவல் நிலையங்கள், 12 டன் திறன்கொண்ட 20 படகுகள், 12 இறங்கு தளங்கள் அமைக்கவும், 30 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும்

60 இருசக்கர வாகனங்கள் வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2013–ஆம் ஆண்டில், கடல்சார் காவல் நிலையங்களில் 150 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடவடிக்கை எடுக்கத்தக்க 142 நுண்ணறிவுத் தகவல்கள் இதர முகமைகளுக்கு அனுப்பப்பட்டன. மேலும், நடுக்கடலில் தத்தளித்த 134 மீனவர்களும், 30 படகுகளும் மீட்கப்பட்டன. கட்டணமில்லா தொலைபேசி மூலம் 328 அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், கடலோரப் பாதுகாப்பு குழுமத்திற்கு கடுந்தன்மை கொண்ட எட்டு உப்பல் படகுகளும், ஆறு ஜெமினி படகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடலோரப் பாதுகாப்பு குழுமம், கடலோரப் பாதுகாப்பு ஆயத்தப் பணிகளில் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய ஆறு மாதத்திற்கு ஒரு முறை பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடலோரப் பாதுகாப்பு குழுமத்திற்கு, மாநில அரசு **2.67** கோடி ரூபாய் செலவில் அனைத்து வகை கரடுமுரடான பாதையிலும் செல்லக்கூடிய தனித்திறன் மிக்க **24** வாகனங்களை வழங்கியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு குழுமத்தினர், கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதில், கடற்படை, கடலோரக் காவல் படை, உள்ளூர் காவல்துறையினர், மீன்வளத்துறை, சுங்கம் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர். **2013**–ஆம் ஆண்டு, **621** தருணங்களில் கடலோர கிராம விழிப்புணர்வுக் குழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

துரித இடைமறிப்பு படகுகளை திறம்பட பராமரிப்பதற்கென கடலோரப் பாதுகாப்பு குழுமத்திற்கு அயற்பணி அடிப்படையில் தளவாய் பணியிடம் ஒன்றுக்கு அரசாணை (நிலை) எண்.**197**,

உள் (காவல் I) துறை, நாள். **26.02.2014**–ன்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## xiii) <u>மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு</u>

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒழிக்கவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில், **94** மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. காவல் ஆய்வாளர் தலைமையில் இயங்கும் இப்பிரிவின் அலகுகள், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், **1937**–ஐ அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, மாவட்டங்களிலும், நகரங்களிலும் காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும்

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முக்கிய பொறுப்பு வகிக்கும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகர காவல் ஆணையாளர்களின் நிர்வாக மற்றும் செயலாக்க கட்டுப்பாட்டில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் மற்றும் அதன் அதிகாரிகள் இயங்கி வருகின்றனர்.

அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு, நாகப்பட்டினம், திருவள்ளூர், வேலூர், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலம், நீலகிரி, திருவாரூர், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் சென்னை பெருநகரம் ஆகிய இடங்களில் 29 மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன. 2013–ஆம் ஆண்டு, கன்னியாகுமரி (1), தேனி (1), விழுப்புரம் (1), கடலூர் (1), வேலூர் (2),

திருவள்ளூர் (3), கிருஷ்ணகிரி (4), சேலம் (1) மற்றும் நாகப்பட்டினம் (2) ஆகிய இடங்களில் மேலும் 16 கூடுதல் மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, தற்போது மாநிலத்தில் மொத்தம் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் செயல்பாட்டில் உள்ளன. இவை தவிர, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் ஆறு நகரும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருவதுடன், 2013–ஆம் ஆண்டு, நாகப்பட்டினத்தில் மேலும் ஒரு நகரும் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

அமலாக்கப்பிரிவு தலைமையகத்தில் அமைந்துள்ள மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் அரசால், மதுவிலக்கு தொடர்பான கட்டணமில்லா தொலைபேசி சேவை எண்.10581 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டணமில்லா தொலைபேசி

**24** மணி நேரமும் ஆட்களைக் கொண்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் மறு வாழ்விற்காக **19.09.2013** நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**60**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VII) துறையின் கீழ் ஐந்து கோடி ரூபாய் மறுவாழ்வு நிதிக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### xiv) <u>இரயில்வே காவல் படை</u>

இரயில்வே காவல் படையானது, இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும் மாவட்ட காவல்துறையினருடன் திறமையாக இணைந்து செயலாற்றி வருகிறது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி இரயில்வே காவல் மாவட்டத்தில்

மொத்தம் 44 இரயில்வே காவல் நிலையங்களும், 13 இரயில்வே புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இப்படையில், மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 1,852 ஆகும்.

2013–ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 410 வழக்குகளில், 346 வழக்குகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ரூ.101.42 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

2013–ஆம் ஆண்டு, இரயில் நிலைய வளாகங்கள் மற்றும் இரயில்களிலிருந்து 143 சிறுமிகள் உள்ளிட்ட மொத்தம் 872 இளஞ்சிறார்கள் மீட்கப்பட்டனர்.

இரயில்களில் மயக்கப் பொருட்களைக் கொடுத்து கொள்ளையடிப்பது குறித்து பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

**84,933** கிலோ அளவுக்கு பொது விநியோக அரிசி கடத்தப்பட்டபோது, அவற்றை இரயில்வே காவல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இராமேஸ்வரம், நெல்லை மற்றும் திருவனந்தபுரம் விரைவு ரயில்களில் மூன்று நகரும் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

### XV) மோப்ப நாய்ப்படை

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிமருந்துகள் மற்றும் போதை பொருட்களைக் கண்டறியவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மோப்ப நாய்ப்படை செயல்பட்டு வருகிறது. சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிரடிப்படை போன்ற சிறப்புப் பிரிவுகளிலும் மோப்ப நாய்ப்படைகள் அமைக்கப் பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பணிகளுக்காக, மாநிலத்தில் தற்போது, **170** மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### xvi) <u>குதிரைப்படை</u>

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள காவல்துறை குதிரைப் படையானது, பண்டிகைகள் / ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்போது கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தினவிழா போன்ற சிறப்பு கால நிகழ்வுகளின்போது கூட்டத்தை கட்டுப்படுத்தவும், ஈடுபடுத்தப்படுகிறது. தற்போது இப்படையிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை **31** ஆகும்.

### xvii) <u>காவலர் பணிகளில் தேர்வு, பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்</u>

### அ) <u>தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுவாரியம்</u>

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலை பணியாளர்களை நியமிக்கும் நோக்கத்தோடு,

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் **1991**–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உருவாக்கப்பட்டது. காவல் உதவி ஆய்வாளர், தொழில்நுட்பப் பிரிவு உதவி ஆய்வாளர், இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், தீயணைப்புப் படை வீரர்கள் பதவிகளுக்கு பாரபட்சமற்ற மற்றும் திட்டமிட்ட முறையில் தேர்வு செய்வதை உறுதி செய்யும் வகையில், தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் செயல்பட்டு வருகிறது.

**12,208** இரண்டாம் நிலை காவலர்களை தெரிவு செய்வதற்காக **21.03.2012** அன்று, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் விளம்பரம் வெளியிட்டது. எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் இதர பணிகளை மேற்கொண்டு, தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட **12,162** இரண்டாம் நிலை காவலர்களுக்கான முடிவை வெளியிட்டது. இவர்களுள் தகுதி வாய்ந்த **11,488** நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அவர்களுக்கு அடிப்படை பயிற்சி

அளித்த பின்னா், 18.10.2013 முதல் அவா்கள் அனைவரும் காவல்துறையில் பணியமா்த்தப்பட்டனா்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளா் தோ்வு வாரிய புதிய கட்டடத்தில், கூடுதலாக ஒரு தளம் கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண்.854, உள் (காவல் 10) துறை, நாள்.18.10.2013–ன்படி ரூ.151.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணியாளா் தோ்வின்போது பல்வேறு கட்டங்களில் உள்சுற்று கண்காணிப்பு கேமரா தொழில்நுட்பம் மூலம் காணொலிக் காட்சிகளை பதிவு செய்யவும், அவற்றை ஒரு ஆவணமாக பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மாநிலம் அல்லது நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடைபெறும் பல்வேறு பணியாளா் தோ்வு மையங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க இயலும்.

பணியாளர் தேர்விற்கான மனு பெறுதல் முதல், இறுதி தகுதிப் பட்டியல் தயாரித்தல் வரை அனைத்து நடவடிக்கைகளும் துல்லியமாக அமையவும், ஆவணப் பயன்பாட்டை குறைக்கவும், முறைகேடுகளை தடுக்கவும், மின் தேர்வு மனு பயன்பாட்டு மென்பொருள் முறை ஒன்றை கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**886** காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான செலவீனமாக **56.04** லட்சம் ரூபாயை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், **277** காவல் தொழில்நுட்ப உதவி ஆய்வாளர் பணியிடங்களும், **201** விரல்ரேகை உதவி ஆய்வாளர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் உள்ளதென கண்டறியப்பட்டு, அப்பணியிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## **ஆ) <u>பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்</u>**

கடந்த ஓராண்டில், **29** இந்திய காவல் பணி அதிகாரிகள், **404** தமிழ்நாடு காவல் பணி அதிகாரிகள், **387** தமிழ்நாடு காவல் சார்புநிலைப் பணி அதிகாரிகள் மற்றும் **301** அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் தத்தமது பணிகளில் அடுத்த நிலைக்குப் பதவி உயர்வு பெற்றனர்.

**2013**–ஆம் ஆண்டில், **1,579** இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், **6,500** தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர் களாகவும் பதவி உயர்வு பெற்றனர். கடந்த ஓராண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழியாக **215** அமைச்சுப் பணியாளர்கள் காவல்துறையில் நேரடி நியமனம் மூலம் பணியில் சேர்ந்தனர்.

## xviii) <u>இளைஞர் படை</u>

எனது அரசு, அரசாணை (நிலை) எண் 432, உள் (காவல் 14) துறை, 01.07.2013–ல் காவல் இளைஞர் படை பிரிவினை அமைப்பதற்கான ஆணை வெளியிட்டது. இப்பிரிவின் கீழ் தேர்வு செய்யப்படும் இளைஞர் படையினர், வாகனங்களை ஓட்டுதல், தபால் பட்டுவாடா செய்தல், தரவுகளைப் பதிவு செய்தல், காவலர் குடியிருப்புகளைப் பராமரித்தல், விபத்துகளில் உயிர்ச்சேதத்தைத் தடுக்க காவல் துறையினருக்கு உதவிபுரிதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என, 2013ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையினர் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் உதவியுடன், இளைஞர் படையினருக்கான தேர்வு, மாவட்ட அளவில் நடத்தப்பட்டது. மொத்தம் 10,500 பணியிடங்களுக் கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, இறுதியாக

**9,079** தகுதியுள்ள நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் **12.02.2014** அன்று அடிப்படை பயிற்சிக்கு அனுப்பப்பட்டு, ஒரு மாத கால பயிற்சிக்குப் பின்னர், தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்கள்/நகரங்களில் அவர்களுக்கென வரையறுக்கப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவசியமில்லாத மற்றும் வழக்கமான அன்றாடப் பணிச்சுமைகளில் இருந்து காவல் துறையினரை விடுவித்து, அவர்களை அடிப்படையான முக்கிய காவல் பணிகளில் உரிய கவனம் செலுத்த வைக்க வேண்டும் என்பதே இளைஞர் படை நிறுவப்பட்டதன் நோக்கமாகும்.

### xix) <u>ஊர்க்காவல் படை</u>

தமிழ்நாடு ஊர்க்காவல் படை அமைப்பானது **1963**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளின்படி உருவாக்கப்பட்டு, வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர கால நிகழ்வுகளைச்

சமாளிக்கவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப் பதற்காகவும், காவல்துறையினருக்கு உதவிபுரியும் ஒரு தன்னார்வ குடிமக்கள் படையாக செயல்பட்டு வருகிறது. போக்குவரத்தைச் சீர்படுத்துதல், கூட்டங்களைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரித்தல், மத நல்லிணக்கத்தை பேணுதல், உடல் ஆரோக்கியம், சுகாதாரம், போதைப் பொருட்கள் பயன்படுத்துவதன் விளைவு, எய்ட்ஸ் உயிர்க்கொல்லி நோய் மற்றும் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற முக்கிய பணிகளில் இப்படை உதவி புரிந்து வருகிறது. தற்போது, **142** ஊர்க்காவல் படை அணிகள் **(116.5** ஆண்கள் அணி மற்றும் **25.5** பெண்கள் அணி**)** செயல்பட்டு வருகின்றன. இவற்றில் **2,805** மகளிர் ஊர்க்காவல் படை உட்பட மொத்தம் **15,622** ஊர்க்காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல்

ஆணையரகங்களில் மகளிர் பிரிவு உள்ளிட்ட ஊர்க்காவல் படையின் அலகுகள் உள்ளன.

இவ்வரசு, மாநில அளவிலான தமிழ்நாடு ஊர்க்காவல்படை பணித்திறன் விளையாட்டு போட்டி நடத்துவதற்கான ஆண்டு நிதிக் கொடையை ரூ.2.50 லட்சத்திலிருந்து ரூ. 10 லட்சமாக உயர்த்தி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

திருப்பூர், கிருஷ்ணகிரி மற்றும் அரியலூரில் ஊர்க்காவல் படை அலகுகளுக்கான புதிய கட்டடங்களைக் கட்ட இவ்வரசு ரூ.45 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

ரூபாய் 1.92 கோடி மதிப்பீட்டில், பழனியில் குடிமை பாதுகாப்பு பயிற்சி மையத்தை உருவாக்க அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், சென்னை, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் குடிமை பாதுகாப்பு பிரிவுகளை உருவாக்க அரசு ரூ.89 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

## XX) மாநில குற்ற ஆவணக் காப்பகம்

காவல் படையின் செயல் திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவணங்கள் முறைமையை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் மாநில குற்ற ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் கீழ், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், குற்றச் செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியன செயல்படுகின்றன.

### அ) குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை (CCTNS)

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை (CCTNS) என்ற அகில இந்திய திட்டத்தை, மாநில குற்ற ஆவணக் காப்பகம் அமலாக்கம் செய்துவருகிறது. 11–வது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக,

தேசிய–மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் குறித்த தரவுகளை விரிவாகவும், ஒருங்கிணைப்பு முறையிலும் திரட்டுவது, மின் ஆளுமை கோட்பாடுகளைப் பின்பற்றி காவல்துறையின் திறமை மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது, நாடு தழுவிய வலைப்பின்னல் கட்டமைப்பை உருவாக்குவது ஆகியன இம்முறைமையின் நோக்கங்களாகும்.

இத்திட்டம் திருவள்ளூர், அரியலூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும், கோயம்புத்தூர் காவல் ஆணையரகத்திலும் செயல்படும் வகையில், **13.3.2013** அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. குடிமக்கள் நுழைவுதளமும் (Citizens Portal) தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், **26.09.2013** அன்று, மீதமுள்ள **35** மாவட்டங்கள் / காவல் ஆணையரகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு முழுமைபெற்றது.

தொடக்கத்தில் மூன்றாண்டுகளில் மூன்று கட்டங்களாக நிறைவேற்றுவது என திட்டமிடப்பட்ட இத்திட்டம், பின்னர் அமலாக்க காலம் குறைக்கப்பட்டு, இரண்டாண்டுகளில் இரண்டு கட்டங்களாக முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், NTL டெக்னாலஜிஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் மாநில குற்ற ஆவணக் காப்பகம் **30.09.2011** அன்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், அதாவது **26.09.2013** அன்று, இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில், **17.7.2013** முதல் **19.7.2013** வரை, நாடுதழுவிய 'மாற்று—மேலாண்மை தொழிற்பட்டறை' (Change Management Workshop) நடத்தப்பட்டது. அத்தொழிற்பட்டறையில், இதர மாநிலங்களிலிருந்து **67** காவல் துறை அதிகாரிகள் பங்கேற்றதுடன், தேசிய

குற்ற ஆவணக் காப்பகம் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகத்தினால் முன்னேறிய மாநிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ள தமிழகத்தில் உள்ள கணினி மயமாக்கப்பட்ட காவல் நிலையங்களை பார்வையிட்டனர்.

மின்–ஆளுமை மூலம் காவல் நிலையங்களை திறம்படுத்துவது, பொதுமக்கள் நலன் சார்ந்த சேவைகளை மேம்படுத்துவது போன்றவை குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறையின் (CCTNS) நோக்கமாகும். பன்முக, வெளிப்படையான, எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய சாதனங்கள் வழியாக நட்புணர்வுடன் காவல்துறையினரின் சேவைகளை பொதுமக்கள் பெறவேண்டும். தற்போதைய காவல் சேவை முறைகளை மேம்படுத்துவது மட்டுமின்றி, இணையதளம் / கைப்பேசி போன்ற மாற்று வசதிகள் மூலம் காவல்துறையை பொது மக்கள் தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்படுவதே இதன் நோக்கமாகும். மேலும், பொதுமக்கள் தங்கள் புகார்

மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையங்களுக்கு அடிக்கடி செல்வதை குறைக்கக் கூடியதாகவும், தங்களது புகார்களின் நிலை குறித்து எளிதாக அறிந்து கொள்ள உதவும் வகையில் இவ்வழிமுறைகள் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையின்கீழ் காவல்துறையின் சிறப்புப் பிரிவுகளைக் கொண்டு வரவும், இச்சிறப்புப் பிரிவுகளில் இத்திட்டத்தை அமல்படுத்தவும் இவ்வரசு ரூ.9.9 கோடி நிதி ஒப்பளித்துள்ளது. பொது ஒருங்கிணைப்பு காவல் ஆவணங்கள் பதிவேற்றமுறை (CIPRUS) மென்பொருள், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையின் (CCTNS) கட்டமைப்புக்கான சொத்து மேலாண்மை மென்பொருள் (AMS), மின்–கற்றல் முறைமை அல்லது கணினிசார் பயிற்சி (CBT)

ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

## ஆ) காவல் கணினி பிரிவு

குற்றங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்கும், புலன் விசாரணை செய்வதற்கு ஏதுவாக குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தரவுகளை கணினிமயமாக்குவதற்கு, காவல் கணினி பிரிவு 1971–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முதன் முதலாக வழங்கப்பட்ட IBM 1440 வகை கணினியானது, துளையிடு அட்டை முறை மூலம் செயல்பட்டதாகும். 1976–ஆம் ஆண்டு, TDC 316 கணினி கொள்முதல் செய்யப்பட்டது. தமிழ்நாடு காவல்துறையில் பயன்படுத்தப்படும் நுண்ணலை வலைதளத்தில் செயல்படும் தொலை அச்சுக் கருவிகள் வாயிலாக மாவட்ட தலைநகரங்களுடன் கணினி இணைக்கப்பட்டது.

காவல் கணினி பிரிவு, குடிமக்கள் நுழைவுதளத்தை (citizen portal) கையாள்வதுடன், புலனாய்வு மற்றும் புள்ளிவிவர சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படும் இதர பயன்பாட்டு மென் பொருள்களையும் மேற்பார்வை செய்து வருகிறது.

பொது மக்கள் அளிக்கும் புகார்கள் அல்லது அது தொடர்பான வழக்குகளின் நிலையைப் பற்றி அறியவும், இணையதளம் மூலமாக புகார்கள் மற்றும் தகவல்களை அனுப்பவும், **13.03.2013** அன்று, 'தமிழ்நாடு காவல் குடிமக்கள் சேவைகள்' (http://eservices.tnpolice.gov.in) என்ற நுழைவுதளம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் உரிமம் கோரி (ஆயுதங்கள், இணையதள மையம், உடற்பயிற்சி நிலையம், காணொலி நூலகம்) விண்ணப்பிக்கவும், படிவங்களை பதிவிறக்கம் செய்வதற்கும், காணாமல் போன நபர்கள், அடையாளம் தெரியாத பிரேதங்கள் மற்றும் குற்றத் தடுப்பு யுக்திகள் ஆகிய தகவல்களைக் காணவும்

இந்த வலைதளம் உதவுகிறது. **1.06.2014** வரை பெறப்பட்ட புகார்களின் மொத்த எண்ணிக்கை **5,603** ஆகும். இணையதள வாயிலாகப் பெறப்படும் புகார்களை கண்காணிக்க, மாநில குற்ற ஆவணக் காப்பகத்தில் வலைதள பிரிவு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. மேலும், அந்தந்த மாவட்டங்கள் / நகரங்களில் இணையதளம் மூலமாக பதிவு செய்யப்படும் புகார்களை ஒருங்கிணைத்து கண்காணிக்க மாவட்ட / நகர அளவிலான வலைதள பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

**31.05.2014** வரை, காணாமல் போன நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத பிரேதங்களின் புகைப்படங்கள் மற்றும் அடையாளக் குறியீடுகளை வலைதளம் மூலமாக ஒப்பீடு செய்ததில் **99** நேர்வுகளில் உரிய நபர்களின் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. **01.06.2014** தேதி நிலவரப்படி, மொத்தம் **52** நேர்வுகளில் புகைப்படங்கள் ஒத்துப்போகின்றன.

உருவப்படம் அமைப்பு முறைமையின் (PBS) கீழ், இதுவரை **954** உருவப்படங்கள் வரையப்பட்டு, அதன்மூலம் **23** வழக்குகளைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்தன. **31.05.2014** தேதி வரை வரையப்பட்ட **39** உருவப்படங்களில், ஒன்பது வழக்குகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் வழங்கப்பட்ட தலாஷ் (TALASH) என்ற பயன்பாட்டு மென்பொருளானது, தேடப்படும் நபர்களுடன் கைது செய்யப்பட்ட நபர்களை ஒப்பிடவும், காணாமல் போனவர் அல்லது காவலிலிருந்து தப்பிச் சென்றவர் அல்லது விட்டோடி ஆகியோரை, அடையாளம் காணப்படாத பிரேதங்கள் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் பயன்படுத்தப் படுகிறது. மாநில குற்ற ஆவணக் காப்பகமும் இந்த பயன்பாட்டு மென்பொருளை பயன்படுத்துகிறது.

மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு முறைமையானது, களவுபோன மற்றும் மீட்கப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்களை துரிதமாக பகிர்ந்து கொள்ள புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவிகரமாக உள்ளது. அனைத்து மாநிலங்களின் **17,59,116** ஆவணங்கள் இதில் உள்ளன. **2014**–ஆம் ஆண்டு மே மாதம் வரை, இம் மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு முறைமையில் மொத்தம் **43,409** மோட்டார் வாகன திருட்டு வழக்குகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, அன்றாட விவரங்கள் பதியப்பட்டுள்ளன.

## இ) <u>விரல் ரேகை பதிவுக் கூடம்</u>

தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் **1895**–ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. இக்கூடம் நாட்டிலேயே மிகப் பழமையானதாகும். தண்டனை பெற்ற அனைத்து குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் திகழ்கிறது. இதில், **1,65,977** தண்டனை

பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அனைத்து மாவட்ட தலைமையிடங்கள் / ஆணையரகங்களில், ஓர் விரல் ரேகைப் பதிவுக் கூடம் அறிமுகப் படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் 36 ஓரிலக்க விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இதுதவிர, சென்னையிலுள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திலும், வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவிலும், சிறப்பு விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

2013–ஆம் ஆண்டில், 790 வழக்குகளில் விரல் ரேகைப் பதிவுகள் மூலம் குற்றவாளிகள் கண்டறிப் பட்டுள்ளனர்.

விரேல் ரேகைப் பதிவுக் கூடமானது, விரல்ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக்

கண்டுபிடிக்கும் முறைமையினை (FACTS) செயல்படுத்தி வருகிறது. இந்த கணினிமயமாக்கப் பட்ட முறைமையானது, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைகளை, கணினித் தரவுத்தளத்திலுள்ள கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது. மாவட்ட அளவில் நிகழும் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாதபோது, மாநில தலைமையிடத்தில் விரல்ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமையின் மூலம் சேமித்து வைக்கப்பட்ட விரல் ரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, மாநில அளவிலான குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. **2013**–ஆம் ஆண்டு இம்முறைமையின் மூலம் **42** நேர்வுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தொலையுணர்வு மூலம் மத்திய தரவுத்தளத்தை அணுகுவதற்கென, எட்டு தொலையுணர் வினா தொகுப்பு நிலையங்கள் (RQWS) செயல்பட்டு வருகின்றன.

பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள், ஆவணத்திலுள்ள விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகளுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன. **2013–**ஆம் ஆண்டில், பிற மாநிலங்களிலிருந்து **152** விரல் ரேகைப் பதிவு சீட்டுகள் உட்பட **15,062** விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகள் பெறப்பட்டன. அவற்றில், பிற மாநிலங்களின் மூன்று வழக்குகள் உட்பட **978** வழக்குகள் கண்டறியப்பட்டன. அடையாளம் காணப்படாத உடல்கள் தொடர்பாக, பிற மாநிலங்களிலிருந்து அனுப்பப்பட்ட **20** விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகள் உட்பட, **430** விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகள் ஆய்வுக்காக பெறப்பட்டன.

திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக ஒருவிரல் ரேகைப் பதிவுக் கூடம் ஒன்றை உருவாக்க அரசாணை (நிலை) எண்.**599**, உள் (காவல்.14) துறை,

நாள்.19.08.2013–ன்படி ஆணை வழங்கப் பட்டுள்ளது.

விரல் ரேகைப் பதிவுக் கூடத்தை பலப்படுத்தும் வகையில் 110 உயர்தர விரல் ரேகைப் பதிவுகளை சேகரிக்கும் பெட்டிகள் வழங்க அரசாணை (நிலை) எண்.184, உள் (காவல் V) துறை, நாள்.25.02.2014–ல் ஆணை வெளியிடப்பட்டது.

**ஈ) <u>குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவு</u>**

இப்பிரிவானது, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புலன்விசாரணை செய்யும் அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளிக்கிறது. காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. மேலும், இப்பிரிவு, குற்ற நுண்ணறிவு அரசிதழை தயாரித்து அதை அனைத்து காவல் நிலையங்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்புகிறது.

மாநில குற்ற ஆவணக் காப்பகத்தில் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு இடர்படி வழங்க அரசாணை (நிலை) எண்.155, உள் (காவல் VIII) துறை, நாள் 24.2.2014–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள பழைய காவல் கணினி மற்றும் தொலைத்தொடர்பு மைய கட்டடத்தின் இடத்தில் மாநில குற்ற ஆவணக் காப்பகம் / தொழில்நுட்பப் பணிகளுக்காக புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 346, உள் (காவல் X) துறை, நாள் 14.05.2014–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## X. <u>வாகன வசதி</u>

கடந்த ஓராண்டு காலத்தில், தமிழக காவல்துறைக்கு ரூ.30,55,31,648/– மதிப்பில் 845 புதிய வாகனங்கள் (பேருந்துகள் 50, ஜீப்புகள்

296, டெம்போ டிராவலர் 25, மோட்டார் சைக்கிள் 474) வாங்க  அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## XI. <u>காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்</u>

### அ) <u>ஒட்டுமொத்த பணிகள்</u>

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகமானது, அனைத்து காவல்துறையின் கட்டுமான பணிகள் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

காவல்துறை பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித்தரும் நலத்திட்டத்தை செயல்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு அரசாணை (நிலை) எண்.2500, உள்துறை, நாள் 27.09.1980–ன்படி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் (TNPHC) உருவாக்கப்பட்டது. இக்கழகம் 1989–ஆம் ஆண்டு அப்போதைய தி.மு.க அரசால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்படுவதற்கு முன்னர், 1,971 வீடுகள்

மட்டுமே இக்கழகத்தால் கட்ட முடிந்தது. மீண்டும் 21.11.1991—ல் எனது அரசால் இக்கழகத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.

முதன் முதலாக, 1992—ஆம் ஆண்டில், காவலர் குடியிருப்புகள் கட்டும் பணியினை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் அரசு ஒப்படைத்தது. காலப்போக்கில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகளும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இக்கழகத்தின் பணிகள் மேலும் விரிவுபடுத்தப் பட்டன. அதன் பின்னர், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல்துறை கட்டடங்களை கட்டுவதற்கான பணிகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகமானது, இதுவரை, 35,187 காவலர் வாடகை குடியிருப்பு

களையும், தீயணைப்பு மற்றும் மீட்பு படை பணியாளர்களுக்கு 990 குடியிருப்புகளையும், சிறைத்துறை பணியாளர்களுக்கு 1,025 குடியிருப்பு களையும், 562 காவல் நிலையங்களையும், 572 ஒய்வறைகளையும், 15 மாவட்ட காவல் அலுவலகங்களையும், ஒன்பது ஆயுதப்படைப் பிரிவு வளாகங்களையும், 19 தங்குமிடங்களையும், 147 மோப்பநாய் பராமரிப்பிடங்களையும், 18 தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை அலுவலகங்களையும், ஐந்து தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை சிறப்பு பிரிவு அலுவலகங்களையும், ஐந்து நவீன கட்டுப்பாட்டு அறைகளையும், நான்கு மண்டல தடய அறிவியல்துறை ஆராய்ச்சி கட்டடங்களையும், 19 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்களையும், நான்கு காவல்துறை துணைத் தலைவர் சரக அலுவலகங்களையும், நான்கு காவல்துறை தலைவர் மண்டல அலுவலகங்களையும்,

நான்கு நகர காவல் அலுவலகங்களையும் கட்டி முடித்துள்ளது.

மேற்கண்ட கட்டடங்களைத் தவிர, காவல்துறை இயக்குநர் அலுவலகத்திற்கென ஒரு இணைப்பு கட்டடம், புழல் சிறை வளாகம், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், கடலோர காவல் குழுமம் சார்ந்த பணிகள், சென்னை மாநகர காவல் ஆணையரக அலுவலகக் கட்டடம், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை அலுவலக கட்டடங்களும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் கட்டப்பட்டுள்ளன.

எனது அறிவிப்புகளின் பேரில் வெளியிடப் பட்டுள்ள அரசாணைகளின்படி மாநிலம் முழுவதும் கட்டப்படும் காவல்துறை கட்டடங்களின் விவரம் பிற்சேர்க்கை 8–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆ) <u>உங்கள் சொந்த இல்லம் திட்டம்</u>

எனது அரசு ‘உங்கள் சொந்த இல்லம்’ திட்டத்தின்கீழ் **36,000** வீடுகள் கட்டுவதற்கென அரசாணை (நிலை) எண்.**345**, உள்துறை நாள்.**11.05.2012**–ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நாட்டில் தனித்துவமிக்க மற்றும் பெரிய அளவிலான முன் முயற்சி திட்டமான இத்திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் ஒரு முன்னோடி திட்டமாக **2,673** வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலக்கோட்டையூரில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற **1,682** காவல் பணியாளர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வழங்குவதற்காக ரூ.**275.49** கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## XII. காவல்துறையின் முக்கிய நிகழ்ச்சிகள்

### அ) பதக்க அணிவகுப்பு

பதக்க அணிவகுப்பு விழாவானது 23.08.2013 அன்று நடத்தப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறை, சிறைத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்த 550 பணியாளர்களுக்கு, அவர்தம் சீரிய பணிகள் மற்றும் மெச்சத்தக்க சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட விவரங்களின்படி பதக்கங்கள் வழங்கப்பட்டன:-

| **துறை** | **இந்திய அரசு பதக்கங்கள்** | **மாநில அரசு பதக்கங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| காவல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | 131 | 242 | 373 |
| ஊர்க்காவல் படை | 17 | 10 | 27 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறை | 49 | 65 | 114 |
| சிறைத்துறை | 16 | 20 | 36 |
| **மொத்தம்** | **213** | **337** | **550** |

## ஆ) அகில இந்திய காவல் அதிரடிப் படை போட்டிகள்

புதுதில்லியிலுள்ள அகில இந்திய காவல் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக நான்காவது அகில இந்திய காவல் அதிரடிப்படை போட்டிகள் 22.1.2014 முதல் 27.1.2014 வரை சென்னை, ஊனமாஞ்சேரியிலுள்ள தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் நடைபெற்றன. தீவிரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான காவல் படையினரின் திறமைகளைச் சோதிக்கும் வகையில் நடத்தப்படும் இந்த குறிப்பிட்ட போட்டி, சென்னையில் முதன் முறையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்க தாகும். 16 மாநிலங்களைச் சேர்ந்த 23 அணிகள் மற்றும் ஏழு மத்திய காவல் அமைப்புகள் இதில் கலந்து கொண்டன. (1) அகில இந்திய அளவில் சிறந்த அதிரடிப்படை குழுவிற்கான ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பை (2) மாநிலங்களிலேயே சிறந்த காவல் அதிரடிப்படை குழுவிற்கான கோப்பை (3) தடைகளைக்

கடக்கும் போட்டிகளில் சிறந்த காவல் அதிரடிப்படை குழுவிற்கான கோப்பை ஆகிய மூன்று கோப்பைகளை தமிழ்நாடு காவல் அதிரடிப்படைக் குழுவினர் வென்றுள்ளனர். இந்நிகழ்ச்சியின் போது, மாநில காவல் படையினரிடையே சிறந்த காவல் அதிரடிப்படை அணிக்கு ஒரு பரிசுக் கோப்பை வழங்கும் புதிய நடைமுறையை நான் அறிமுகப்படுத்தி வைத்தேன்.

## சாதனைகள் மற்றும் அங்கீகாரம்

### அ) ஆந்திர மாநிலம் புத்தூர் செயல்பாடுகள்

மாநிலத்தில் நிகழ்ந்த பல்வேறு கொலைகள், குண்டுவெடிப்புகளில் தொடர்புடைய மத அடிப்படைவாதிகள் ஆந்திர மாநிலம், புத்தூரில் உள்ள ஒரு வீட்டினுள் தலைமறைவாக இருந்தபோது, அதிரடியாக கைது செய்யப்பட்ட நடவடிக்கையில் சீரிய முறையிலும், தைரியமாகவும் ஈடுபட்ட காவல் ஆய்வாளர் ஒருவருக்கு ரூ.15 லட்சம் பரிசும், அவருடன் சேர்ந்து பணியாற்றிய 21 காவல்

பணியாளர்களுக்கு தலா ரூபாய் ஐந்து லட்சம் பரிசும் வழங்க **8.10.2013** அன்று நான் அறிவித்தேன். இந்த செயல்பாட்டின்போது, காவல் ஆய்வாளர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டு, காயமடைந்த நிலையிலும், முன்பின் அறிமுகமில்லாத இடத்தில் காவல்துறையினர் திறம்பட செயல்பட்டு, எவ்வித உயிர்ச்சேதமுமின்றி, மறைந்திருந்த குற்றவாளிகளை வெளிக்கொணர்ந்தனர். மேலும், இக்குற்றவாளிகள் மற்றும் அவர்கள் தொடர்புடைய வழக்குகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக இருந்த மூன்று காவல் அதிகாரிகள்/ பணியாளர்களுக்கு தலா ரூபாய் ஐந்து லட்சமும், மூன்று காவல் பணியாளர்களுக்கு தலா ரூபாய் இரண்டு லட்சமும் மற்றும் **234** காவல் அதிகாரிகள்/ பணியாளர்களுக்கு தலா ரூபாய் ஒரு லட்சமும் பரிசாக வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. காவல் பணியாளர்களின் இத்தகைய வீரதீரமிக்க, அர்ப்பணிப்புத் தன்மையுடன்கூடிய பணிக்கு

அங்கீகாரம் அளிக்கும் வகையில் மொத்தம் ரூ.3.80 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

மேலும், சென்னை மற்றும் புத்தூர் ஆகிய இடங்களில் தீவிரவாதிகளை பிடிக்கும் நடவடிக்கையில் அதீத துணிச்சலுடன் சாதுர்யமாக செயலாற்றிய 20 காவல் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், அவர்களுக்கு ஒருபடி பதவி உயர்வு வழங்கப்பட்டது.

## ஆ) விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள்

கால்பந்து மற்றும் கைப்பந்து போட்டிகள் நடத்தப்படுவது 61 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு காவல் அணிகள், முதன்முறையாக அப்போட்டிகளில் வென்று சாதனை படைத்தன. இந்த அணிகள் கால்பந்து போட்டியில் இரண்டாவது இடத்தையும், கைப்பந்து போட்டியில் மூன்றாவது இடத்தையும் வென்றன.

பணித்திறன் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் சிறந்து விளங்கும் காவல் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தற்போது கீழ்க்கண்ட வெகுமதிகளை அரசு அறிவித்துள்ளது.

| | | |
|---|---|---|
| தங்கப் பதக்கம் | : | ரூபாய் ஐந்து லட்சம் |
| வெள்ளிப் பதக்கம் | : | ரூபாய் மூன்று லட்சம் |
| வெண்கலப் பதக்கம் | : | ரூபாய் இரண்டு லட்சம் |
| முதலிடத்திற்கான கோப்பையை வென்ற குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் | : | ரூபாய் ஐம்பதாயிரம் |
| இரண்டாமிடத்திற்கான கோப்பையை வென்ற குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் | : | ரூபாய் முப்பதாயிரம் |

## இ) பணித்திறன் போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு காவல் அணிகளின் சாதனைகள்

2013–ஆம் ஆண்டு, அரியானா மாநிலம், மதுபனில் 57–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள் 07.03.2014 முதல் 14.03.2014 வரை நடைபெற்றது. அதில், 21 மாநிலங்கள் மற்றும் ஏழு மத்திய காவல் அமைப்புகள் ஆறு போட்டிகளில் கலந்துகொண்டன. இதில், தமிழ்நாடு காவல் அணியானது 28 பதக்கங்களை (துங்கம்–13, வெள்ளி–9, வெண்கலம்–6) வென்றது. இப்போட்டிகளில், தமிழ்நாடு காவல் அணியினர் ஏழு கோப்பைகளை வென்றனர். புலன்விசாரணையில் அறிவியலின் பங்கு, கணிணி விழிப்புணர்வு, புகைப்படக்கலை மற்றும் மோப்ப நாய்களுக்கான போட்டிகளில் முதல் பரிசும், புலன்விசாரணையில் அறிவியல் துறையின் பங்கு மற்றும் நாசவேலை தடுப்புக்கான இரண்டாம் பரிசையும், சிறந்த மாநிலம் / மத்திய காவல் அமைப்பு / யூனியன் பிரதேசத்திற்கான

சிறந்த காவல் அணிக்காக வழங்கப்படும் "ஆந்திர பிரதேச முதலமைச்சர் கோப்பை" யையும் வென்றது. இதுவரை நடைபெற்ற காவல் பணியாளர் திறன் போட்டிகளில் எவரும் சாதிக்காத வகையில், அதிகமான பதக்கங்களை தமிழ்நாடு காவல் அணியினர் பெற்றனர். பல்வேறு அகில இந்திய காவல் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பணித் திறன் போட்டிகளில் மிகச்சிறப்பான வகையில் திறமைகளை வெளிப்படுத்திய 99 காவல் ஆளிநர்களுக்கு, 30.05.2014 அன்று நான் ரூ.2,08,80,000/– பெறுமானமுள்ள பண வெகுமதிகளை வழங்கினேன்.

## XIII. <u>தடய அறிவியல் துறை</u>

தமிழ்நாடு தடய அறிவியல் பரிசோதனைக் கூடம் 1959–ல், முன்னர் மருத்துவதுறையின்கீழ் செயல்பட்டு வந்த "ரசாயன பரிசோதகர்களின் ஆய்வகம்" (1849), மதுவிலக்கு மற்றும் கலால் ஆய்வகம் (1886) மற்றும் காவல்துறையின்கீழ் செயல்பட்டு வந்த அறிவியல் பிரிவுகள் (1905) ஆகியவற்றை ஒருங்கிணைத்து நிறுவப்பட்டது.

1984–ஆம் ஆண்டு இந்த ஆய்வகம் தடய அறிவியல் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்துறையின் முதன்மை குறிக்கோளானது, நீதியை சிறந்த முறையில் நிலைநாட்ட தடய அறிவியல் சேவை புரிவதேயாகும்.

## <u>துறையின் அமைப்பு</u>

### 1. <u>தலைமை ஆய்வகம்</u>

இத்துறையானது, மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், கணினி தடயவியல், மரபணு ஆய்வு, ஆவண ஆய்வு, கலால், வெடிபொருள் ஆய்வு, போதைப்பொருள் ஆய்வு, இயற்பியல், மதுவிலக்கு பொருட்கள் ஆய்வு, குருதிவடிநீரியல் மற்றும் நஞ்சியல் ஆகிய 14 சிறப்பு பகுப்பாய்வு பிரிவுகளை உள்ளடக்கிய தலைமை ஆய்வகத்தை சென்னையில் கொண்டுள்ளது. பல்வேறு சிறப்பு பகுப்பாய்வு பிரிவுகளிலிருந்து பகுப்பாய்வு செய்வதற்காக பெறப்பட்ட குற்றச்சான்றுகளை ஆவணப்படுத்த தனியாக புகைப்படப் பிரிவு ஒன்று உள்ளது. தலைமை

ஆய்வகத்தில் வரவேற்பறை, உபகரணங்கள் மற்றும் கிடங்கு பிரிவுகளும் உள்ளன.

## 2. வட்டார தடய அறிவியல் ஆய்வகம்

கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3. நகரும் தடய அறிவியல் ஆய்வகங்கள்

புலன்விசாரணை அதிகாரிகளுக்கு அறிவியல் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக சென்னையில் இரண்டும், 31 காவல் மாவட்டங்கள்/ ஆணையரகங் களுக்கு தலா ஒன்று வீதம், மொத்தம் 33 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன.

## சாதனைகள்

2013–ஆம் ஆண்டில், இத்துறையில் 53,629 குற்ற வழக்குகளில் தொடர்புடைய, 1,78,126 சாட்சியப்

பொருட்கள் பரிசோதனை செய்து அறிக்கை அளிக்கப்பட்டன. அந்த அறிக்கைகள் புலன் விசாரணைக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததோடு, நீதி வழங்கிட பெரிதும் உதவிகரமாகவும் அமைந்தன.

## XIV <u>முடிவுரை</u>

தமிழ்நாடு காவல்படையானது, நாட்டிலேயே மிகச்சிறந்த மற்றும் திறமையான சீருடைப்படை என்ற பெருமையை தக்கவைத்து வருகிறது. விரைவான முன்னேற்றம் மற்றும் துரிதமான தொழில் வளர்ச்சி அடைவதற்கு, தற்போது நிலவி வரும் சமூகப் பொருளாதார சூழலில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வது அத்தியாவசிய மாகிறது. சட்டம் ஒழுங்கை திறம்பட பராமரிப்பதன் மூலமாகவும், தக்க தருணத்தில் குற்றங்களைத் தடுப்பது மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதன் வாயிலாகவும், அமைதியான ஒரு சூழலை உருவாக்குவதற்கு காவல்படை மிக முக்கிய பங்காற்றுகிறது.

மனிதநேயம், மனிதத்தன்மை மற்றும் மனிதக் கோட்பாடுகள் போன்றவற்றை கைவிடாமலும், அண்மைக் காலங்களில் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு காவல்படையானது மேலும் வீறுநடை போட்டு முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதே எனது முழு முதல் முயற்சியாகும்.

குற்றவாளிகள் துரிதமாக கைது செய்யப் படுவதால், சட்டத்தை மீறுவோர் மனங்களில் சட்டரீதியான நடவடிக்கைகள் குறித்த அச்சம் ஏற்படுவதுடன், தெருக்கள் எல்லாம் தற்போது பாதுகாப்பான இடங்களாக மாறியுள்ளன. சிறப்பாகவும், திறம்படவும் செயல்பட வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் தமிழக காவல்படை கடமையாற்றி வருகிறது.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

# பிற்சேர்க்கை – 1

## 2012 முதல் 2013 வரை பதியப்பட்ட இந்திய தண்டனைச்சட்ட குற்றங்கள் (தலைப்புவாரியாக)

| வ.எண் | குற்றத்தின் தலைப்பு | 2012 | 2013 |
|---|---|---|---|
| சொத்து தொடர்பான குற்றங்கள் | | | |
| 1 | ஆதாயக் கொலைகள் | 137 | 121 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 97 | 83 |
| 3 | கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமி இருத்தல் | 19 | 55 |
| 4 | வழிப்பறி | 1,898 | 2,186 |
| 5 | கன்னக்களவு | 4,457 | 5,125 |
| 6 | திருட்டு | 11,996 | 11,950 |
| கொடுங்குற்றங்கள் | | | |
| 7 | கொலை | 1,806 | 1,806 |
| 8 | கொலை முயற்சி | 2,954 | 3,007 |
| 9 | கொலை என கருத முடியாத குற்றங்கள் | 44 | 33 |
| 10 | அடிதடி வழக்குகள் | 22,100 | 20,984 |
| 11 | கலவரங்கள் | 3,136 | 2,701 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | | | |
| 12 | கற்பழிப்பு | 737 | 923 |

| | | | |
|---|---|---|---|
| 13 | வரதட்சணை மரணங்கள் | 110 | 118 |
| 14 | மானபங்கம் | 1,494 | 1,271 |
| 15 | பாலியல் வன்கொடுமை | 382 | 313 |
| 16 | கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை | 1,965 | 2,471 |
| 17 | பெண் கடத்தல் | 1,693 | 1,516 |
| பிற இந்திய தண்டனை சட்ட (இதச) குற்றங்கள் | | | |
| 18 | ஆள் கடத்தல் | 252 | 263 |
| 19 | நம்பிக்கை மோசடி | 262 | 238 |
| 20 | தீ வைத்தல் | 726 | 645 |
| 21 | மோசடி | 4,151 | 4,647 |
| 22 | கள்ளநோட்டு | 377 | 320 |
| 23 | மரண விபத்துக்கள் | 15,469 | 14,919 |
| 24 | மரணம் ஏற்படுத்தாத விபத்துக்கள் | 52,712 | 51,571 |
| 25 | பிற இதச குற்றங்கள் | 71,500 | 76,313 |
| | **மொத்த இதச வழக்குகள்** | **2,00,474** | **2,03,579** |

## பிற்சேர்க்கை – 2

## 2004 முதல் 2013 வரை பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகள் பற்றிய விவரம்

| வ.எண் | வருடம் | பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகளின் எண்ணிக்கை | சதவீத மாறுபாடு |
|---|---|---|---|
| 1 | 2004 | 1,406 | |
| 2 | 2005 | 1,366 | –2.84 |
| 3 | 2006 | 1,274 | –6.73 |
| 4 | 2007 | 1,521 | 19.39 |
| 5 | 2008 | 1,630 | 7.17 |
| 6 | 2009 | 1,644 | 0.86 |
| 7 | 2010 | 1,715 | 4.32 |
| 8 | 2011 | 1,747 | 1.86 |
| 9 | 2012 | 1,806 | 3.38 |
| 10 | 2013 | 1,806 | 0 |

## பிற்சேர்க்கை – 3

## 2012 முதல் 2013 வரை நடந்த கொலைகளுக்கான காரணங்கள்

| வ.எண் | காரணங்கள் | 2012 | 2013 |
|---|---|---|---|
| 1 | குடும்பத் தகராறு | 416 | 425 |
| 2 | வாய்த் தகராறு | 309 | 305 |
| 3 | முன்விரோதம் | 320 | 331 |
| 4 | காதல் மற்றும் பாலியல் காரணங்கள் | 321 | 351 |
| 5 | பணம் கொடுக்கல் வாங்கல் | 69 | 65 |
| 6 | நிலத்தகராறு | 146 | 137 |
| 7 | குடிபோதையில் தகராறு | 22 | 22 |
| 8 | வரதட்சனை | 13 | 12 |
| 9 | அரசியல் காரணங்கள் | 5 | 6 |
| 10 | இதர காரணங்கள்• | 173 | 145 |
| 11 | சாதி பாகுபாடு | 12 | 7 |
| | **மொத்தம்** | **1,806** | **1,806** |

- இதர காரணங்கள் – கண்டுபிடிக்க முடியாத வழக்குகளை உள்ளடக்கியது.

## பிற்சேர்க்கை – 4

## 2013–ல் மாவட்ட வாரியாக நிகழ்ந்த மொத்த சாலை விபத்துக்களின் விவரம்

| வ. எண். | மாவட்டம் | சாலை விபத்துக் களின் எண்ணிக் கை | உயிரிழந் தோரின் எண்ணிக் கை |
|---|---|---|---|
| 1. | நீலகிரி | 280 | 45 |
| 2. | பெரம்பலூர் | 470 | 162 |
| 3. | அரியலூர் | 536 | 152 |
| 4. | இராமநாதபுரம் | 882 | 279 |
| 5. | சிவகங்கை | 960 | 262 |
| 6. | கரூர் | 1,017 | 341 |
| 7. | திருவாரூர் | 1,039 | 187 |
| 8. | தேனி | 1,184 | 227 |
| 9. | திருவள்ளூர் | 1,200 | 346 |
| 10. | கன்னியாகுமரி | 1,223 | 285 |
| 11. | புதுக்கோட்டை | 1,225 | 349 |
| 12. | விருதுநகர் | 1,230 | 309 |
| 13. | நாகப்பட்டினம் | 1,288 | 237 |
| 14. | தூத்துக்குடி | 1,439 | 380 |

| | | | |
|---|---|---|---|
| 15. | தருமபுரி | 1,500 | 363 |
| 16. | திருவண்ணாமலை | 1,663 | 462 |
| 17. | கிருஷ்ணகிரி | 1,688 | 477 |
| 18. | ஈரோடு | 1,839 | 554 |
| 19. | நாமக்கல் | 1,954 | 442 |
| 20. | திண்டுக்கல் | 2,015 | 611 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 2,282 | 685 |
| 22. | தஞ்சாவூர் | 2,273 | 469 |
| 23. | திருநெல்வேலி | 2,283 | 576 |
| 24. | திருப்பூர் | 2,515 | 724 |
| 25. | மதுரை | 2,678 | 660 |
| 26. | விழுப்புரம் | 3,143 | 824 |
| 27. | வேலூர் | 3,173 | 772 |
| 28. | காஞ்சிபுரம் | 3,191 | 920 |
| 29. | சேலம் | 3,200 | 769 |
| 30. | கோயம்புத்தூர் | 3,563 | 954 |
| 31. | கடலூர் | 3,595 | 490 |
| 32. | சென்னை | 9,710 | 1,250 |
| | **மொத்தம்** | **66,238** | **15,563** |

## பிற்சேர்க்கை – 5
## காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள்
**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 2000–01 | 76.50 | 76.50 | 153.00 |
| 2001–02 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002–03 | 68.10 | 68.10 | 136.20 |
| 2003–04 | 52.47 | 36.67 | 89.14 |
| 2004–05 | 56.76 | 37.84 | 94.60 |
| 2005–06 | 65.46 | 21.82 | 87.28 |
| 2006–07 | 59.40 | 19.80 | 79.20 |
| 2007–08 | 75.75 | 25.25 | 101.00 |
| 2008–09 | 51.00 | 17.00 | 68.00 |
| 2009–10 | 60.67 | 20.22 | 80.89 |
| 2010–11 | 92.52 | 30.69 | 123.21 |
| 2011–12 | 43.19 | 14.24 | 57.43 |
| 2012–13 | 17.70 | 11.80 | 29.50 |
| 2013–14 | 64.71 | 43.14 | 107.85 |

## பிற்சேர்க்கை–6
## புறநோயாளிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தலைமையிடங்கள்

| வ. எண் | பெயர் |
|---|---|
| 1. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-III ஆம் அணி வீராபுரம், திருவள்ளூர் மாவட்டம். |
| 2. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-IV ஆம் அணி, கோவைபுதூர், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 3. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-VI ஆம் அணி, மதுரை மாவட்டம். |
| 4. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-VII ஆம் அணி, போச்சம்பள்ளி, தருமபுரி மாவட்டம். |
| 5. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-IX ஆம் அணி, திருநெல்வேலி மாவட்டம். |
| 6. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-X ஆம் அணி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம். |
| 7. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-XI ஆம் அணி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். |
| 8. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-XII ஆம் அணி, மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-XIII ஆம் அணி, பூவிருந்தவல்லி, சென்னை. |
| 10. | தமிழ் நாடு சிறப்புக் காவல் படை-XIV ஆம் அணி, பழனி, திண்டுக்கல் மாவட்டம். |

## பிற்சேர்க்கை–7

## புறநோயாளிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள ஆயுதப் படை தலைமையிடங்கள்

| வ.எண் | தலைமையிடங்கள் |
|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி நகரம் |
| 2. | காஞ்சிபுரம் |
| 3. | திருவள்ளூர் |
| 4. | திருவண்ணாமலை |
| 5. | விழுப்புரம் |
| 6. | திருச்சிராப்பள்ளி |
| 7. | பெரம்பலூர் |
| 8. | அரியலூர் |
| 9. | கரூர் |
| 10. | புதுக்கோட்டை |
| 11. | தஞ்சாவூர் |
| 12. | நாகப்பட்டினம் |
| 13. | திருவாரூர் |
| 14. | கோயம்புத்தூர் |
| 15. | ஈரோடு |
| 16. | நீலகிரி |
| 18. | நாமக்கல் |
| 19. | தருமபுரி |
| 20. | கிருஷ்ணகிரி |
| 21. | திண்டுக்கல் |
| 22. | இராமநாதபுரம் |
| 23. | சிவகங்கை |
| 24. | தேனி |
| 25. | தூத்துக்குடி |
| 26. | கன்னியாகுமரி |

## <u>பிற்சேர்க்கை– 8</u>

## <u>காவலர் குடியிருப்பு மற்றும் கட்டடங்கள்</u>

| வ எண் | கட்டடத்தின் வகை | கட்டடம் கட்டப்பட்ட இடம் / இடங்கள் |
|---|---|---|
| 1 | புதிய காவல் நிலைய கட்டடம் | வடவள்ளி, அன்னூர் மற்றும் மதுக்கரை – கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2 | புதிய காவல் நிலைய கட்டடம் | புவனகிரி – கடலூர் மாவட்டம் |
| 3 | புதிய காவல் நிலைய கட்டடம் | சிலைமான் – மதுரை மாவட்டம் |
| 4 | புதிய காவல் நிலைய கட்டடம் | செவ்வூர் – திருப்பூர் மாவட்டம் |
| 5 | புதிய காவல் நிலைய கட்டடம் | வெள்ளியணை – கரூர் மாவட்டம் |
| 6 | புதிய காவல் நிலைய கட்டடம் | மேலாட்டூர் – தஞ்சாவூர் மாவட்டம் |
| 7 | புதிய காவல் நிலைய கட்டடம் | கபிஸ்தலம் – தஞ்சாவூர் மாவட்டம் |
| 8 | புதிய காவல் நிலைய கட்டடம் | பொன்னமராவதி – புதுக்கோட்டை மாவட்டம் |
| 9 | புதிய காவல் நிலைய கட்டடம் | எடையூர் மற்றும் தேவாங்குடி – திருவாரூர் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 10 | புதிய காவல் நிலைய கட்டடம் | வேதாரண்யம் மற்றும் வேட்டைக்காரனிருப்பு – நாகப்பட்டினம் மாவட்டம் |
| 11 | புதிய காவல் நிலைய கட்டடம் | சூலகிரி – கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 12 | புதிய காவல் நிலைய கட்டடம் | வி.களத்தூர் – பெரம்பலூர் மாவட்டம் |
| 13 | புதிய காவல் நிலைய கட்டடம் | அல்லிநகரம் – தேனி மாவட்டம் |
| 14 | புதிய காவல் நிலைய கட்டடம் | தென்கரை – தேனி மாவட்டம் |
| 15 | புதிய தாலுகா காவல் நிலைய கட்டடம் | திருச்செந்தூர் தாலுகா – தூத்துக்குடி மாவட்டம் |
| 16 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | பேரூர் – கோயம்புத்தூர் மாவட்டம் |
| 17 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | திட்டக்குடி – கடலூர் மாவட்டம் |
| 18 | ஊரக உட்கோட்ட அலுவலகம் | திண்டுக்கல் – திண்டுக்கல் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 19 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | ஊமச்சிக்குளம் – மதுரை மாவட்டம் |
| 20 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | அவிநாசி – திருப்பூர் மாவட்டம் |
| 21 | ஊரக உட்கோட்ட அலுவலகம் | கரூர் – கரூர் மாவட்டம் |
| 22 | ஊரக உட்கோட்ட அலுவலகம் | சேலம் மற்றும் வாழப்பாடி – சேலம் மாவட்டம் |
| 23 | காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் | பெருந்துறை – ஈரோடு மாவட்டம் |
| 24 | உட்கோட்ட அலுவலகம் | கோட்டைபட்டினம் – புதுக்கோட்டை மாவட்டம் |
| 25 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | திருவாடனை – ராமநாதபுரம் மாவட்டம் |
| 26 | உட்கோட்ட அலுவலகம் | ஊத்தங்கரை – கிருஷ்ணகிரி மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 27 | காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் | மங்களமேடு – பெரம்பலூர் மாவட்டம் |
| 28 | போக்குவரத்து காவல் நிலையம் | ஜெயங்கொண்டம் – அரியலூர் மாவட்டம் |
| 29 | போக்குவரத்து காவல் நிலையம் | திருவெறும்பூர் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 30 | அனைத்து மகளிர் காவல் நிலையம் | திருமயம் – புதுக்கோட்டை மாவட்டம் |
| 31 | அனைத்து மகளிர் காவல் நிலையம் | ஜீயர்புரம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 32 | புதிய சட்டம் ஒழுங்கு, குற்றம் மற்றும் போக்குவரத்து காவல் நிலையம் | ஸ்ரீரங்கம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 33 | புதிய காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் | திருப்பூர் வடக்கு – திருப்பூர் மாவட்டம் |

****